# தமிழரசு

16-12-1991 ரூ.1





# காவிரி நதிநீர்ப் பங்கீடு: பிரதமருக்கு முதல்வர் நன்றி

காவிரி நீர்ப் பங்கீடு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டதற்காக, பிரதமர் மாண்புமிகு திரு. பி.வி.நரசிம்மராவ் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 11.12.'91 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ''காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றியதற்காக தமிழக மக்களின் சார்பில், அதிலும் குறிப்பாக காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகள் சார்பில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

பிரதமர் அவர்கள் தமிழகத்துக்கு நீதி வழங்கியுள்ளார். தமிழக மக்களின் உயிர்நாடியான பிரச்சினையான காவிரி எப்போதும் உயிரோட்டமுள்ளதாகவும், தமிழக மக்களின் வாழ்க்கைக்குத் தொடர்ந்து ஆதரவாக இருக்கும் என்றும் உறுதிப்படுத்தியதற்காக, தமிழக மக்கள் பிரதமருக்கு எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இந்த இதழில்...


அனைத்துக் கட்சிக் குழுவினருடன் முதல்வர் டெல்லி பயணம் ... 2

காவல் துறையை நவீனமாக்குவோம்! காலத்துக்கேற்ற திறன்களை வளர்ப்போம்! -மாண்புமிகு முதல்வர் உரை ... 4

ஐந்து ஆண்டுகளில் சென்னை மாநகர் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெறும்! —மாண்புமிகு முதல்வர் ... 10

தொழுநோய் - சமுதாயத்தின் கண்ணோட்டம் மாற வேண்டும் ... 17

வெற்றிலையின் ரகசியம் ... 18

கோழி முட்டையின் பிற பயன்கள் ... 19

மரம் வளர்ப்போம்! (கவிதை) ... 24

ஞானம் (இலக்கியக் கட்டுரை) ... 25

இரத்தக் கொதிப்பு ... 27

தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம் ... 31

படைவீரர் புகழ்பாடும் கொடிநாள் —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

கல்லும் சொல்லாதோ கதை! ... 36

முக்கிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முதல்வர் நடவடிக்கை ... 41

படமும் செய்தியும் ... 42

முன்னாள் படைவீரர் நலத்துறையின் முனைப்பான பணிகள் ... 45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மார்கழித் திங்கள் - 1

மலர்:22 இதழ்:12

16-12-1991



காவிரிப் பிரச்சினை

# நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக் கோரி அனைத்துக் கட்சிக் குழுவினருடன்

# முதல்வர் டெல்லி பயணம்

**கா**விரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி உச்ச நீதிமன்றத்தின் கருத்தினை, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் வாதங்களைக் கேட்டறிந்த பின்னர் தனது கருத்துக்களை 22.11.1991 அன்று தெரிவித்தது.

கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. மாநிலங்களுக்கு இடையே நதி நீர்ப் பிரச்சினை குறித்து விவாதிக்க நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அதில் மாநில அரசு தலையிட முடியாது. எனவே, கர்நாடக அரசு அவசரச் சட்டம் மூலம் இதைத் தடுக்க முடியாது. அரசியல் சட்டத்திலும் இதற்கு இடமில்லை என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர். அதோடு நடுவர் மன்றத்துக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவும் உரிமை உண்டு. எனவே, கர்நாடகம் தமிழ்நாட்டுக்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிடலாம் என நீதிபதிகள் தங்கள் கருத்தினைக் கூறியுள்ளனர்.

காவிரி நதி நீர்ப் பங்கீடு சம்பந்தமாக நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பினை அரசிதழில் வெளியிடக் கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்து வற்புறுத்த, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் 2.12.1991 அன்று மாலை விமானம் மூலம் சென்னையிலிருந்து புறப்பட்டு டெல்லி சென்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், திரு. மணிவர்மா, திரு. வி. தண்டாயுதபாணி (இந்திய தேசிய காங்கிரஸ்), திரு. ஜி. வெங்கடராமன், எம்.பி., திரு. ஜே.எஸ். ராஜூ, எம்.பி.(தி.மு.க.), திரு. வி. விஜயராகவலு (பாரதிய ஜனதா கட்சி), திரு. நல்லக்கண்ணு (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி), திரு. தஞ்சை ராமமூர்த்தி (ஜனதா தளம்), திரு. பண்ருட்டி எஸ். ராமச்சந்திரன், எம்.எல்.ஏ (பாட்டாளி மக்கள் கட்சி), திரு. ஜி.ஜி. குருமூர்த்தி (ஜனதா தளம் - சமாஜ்வாடி), திரு. ஆண்டித் தேவர், எம்.எல்.ஏ. (பார்வர்ட் பிளாக்), திரு. என்.எல். பழனிசாமி, எம்.எல்.ஏ. (உழைப்பாளர் கட்சி), திரு. செ.கு. தமிழரசன், எம்.எல்.ஏ (குடியரசுக் கட்சி), திரு. கே. வீரமணி (திராவிடர் கழகம்), திரு. அப்துல் சமது (முஸ்லீம் லீக்), திரு. அப்துல் லத்தீப் (முஸ்லீம் லீக்-லத்தீப் பிரிவு), திரு. எஸ். ரங்கநாதன் (காவிரிப் படுகை உழவர் சங்கச் செயலாளர்), திரு. சி. வையாபுரி (தலைவர், ஐக்கிய உழவர் சங்கம்) தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மாண்புமிகு பிரதமர் அவர்களை 3.12.91 அன்று டெல்லியில் சந்தித்தனர். அப்பொழுது மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. ப. சிதம்பரம், திரு. எம். அருணாசலம், திரு. பி. ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோர் உடனிருந்தனர்.

அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம், காவிரி நதி நீர்ப் பங்கீடு பற்றிய, நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை, அரசிதழில் உடனடியாக வெளியிடக் கோரி மனுவினை அளித்தனர். மிகவும் சுமூகமான சூழ்நிலையில் சுமார் அரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது. தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இம்மனுவைத் தாம் அளிப்ப



தாகவும், நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவினை உடனடியாக அரசிதழில் வெளியிட வேண்டுமெனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களும் வலியுறுத்திப் பேசினர். அனைவரது கருத்துக்களையும் அமைதியாகக் கேட்ட மாண்புமிகு பிரதமர் அவர்கள் உச்ச நீதிமன்றக் கருத்துக்களை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதாகவும், தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்த மனு உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என்றும் உறுதி கூறினார்.

அதையடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமரு ன் தனியாக, தமிழகத்தைப் பற்றிய முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாத்தார். குறிப்பாக பொது வினியோகத்திற்குக் கூடுதலாக ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசி, தமிழகத்தின் நெருக்கடியான நிதி நிலையைச் சமாளிக்க சிறப்பு நிதி உதவி, உடனடி புயல் நிவாரண நிதி ஆகியவைகளைக் கோரினார். மேலும், சென்னைத் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றவும், எண்ணூரில் துணைத் துறைமுகத்தை உடனடியாக நிறுவிடவும், அரோமேடிக் திட்டத்திற்கு உடனடி அனுமதி வழங்கவும், தெலுங்கு-கங்கைத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றிடவும் பிரதமரின் உதவியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு பிரதமர் அவர்கள் இவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்டு உடனடியாகக் கவனித்து ஆவன செய்வதாக உறுதியளித்தார்.





காவல் துறை திறன் போட்டி

# காவல் துறையை நவீனமாக்குவோம்!

# காலத்துக்கேற்ற திறன்களை வளர்ப்போம்!

## மாண்புமிகு முதல்வர் உரை

**ப**ல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை புரிந்து போட்டிகளில் கலந்து கொண்ட 1,800-க்கும் மேற்பட்ட காவல் துறையினருக்கும், சென்னையில் மூன்றாவது முறையாக நடைபெறுவதும், 1974-ஆம் ஆண்டுக்குப்பின் தற்போதுதான் நடைபெறுவதுமாகிய இவ்விழாவினைச் சிறப்பாக நடத்திட அயராது பாடுபட்ட அனைத்துக் காவல் துறை அலுவலர்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடு முழுவதிலுமுள்ள காவல் துறையினர் தங்களது திறமைகளைப் போட்டி போட்டுக் கொண்டு இங்கு கடந்த சில நாட்களாக வெளிப்படுத்தியுள்ளனர். காவல் துறையினைச் சிறந்த முறையில் நிர்வகிக்க இன்றியமையாத அம்சங்களான துப்பறிவதில் உதவும் சாதனங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள், தடயவியல் விஞ்ஞானம், துப்பாக்கிச் சுடுதல், முதலுதவி போன்றவற்றில் காவல் துறையினருக்கு உள்ள மிகச்சிறந்த திறமைகளைக் காணுகின்ற வாய்ப்பு பொது மக்களுக்கும் கிடைத்தது என நான் அறிந்தேன்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை நான் வாழ்த்துகிறேன். இம்முறை வெற்றி பெறாதவர்கள், தங்கள் திறமைகளை நன்கு வளர்த்துக் கொண்டு அடுத்தமுறை வெற்றிபெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். போட்டிகளில் வெற்றி பெறுவது முக்கியம்தான். ஆனால், இப்போட்டிகளில் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதும், அதன் மூலம் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதும், அந்தத் திறமைகளைச் சமுதாயத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்துவதும்தான் மிகவும் முக்கியம்.

புகழ்மிக்க 'யுலிசிஸ்' (Ulysses) கவிதையில் டென்னிசன் எழுதிய 'முயற்சி செய்ய, தேட, கண்டு பிடிக்க, தளர்ந்துவிடாமல் இருக்க' எனும் வரிகளை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். உலகில் பெரிய சாதனைகளைச் சாதித்த பலரும், தம் இளம் வயதில் அச்சாதனைகளைப் பற்றிக் கனவுகூடக் காணாமல், தம் விடாமுயற்சியால், எடுத்த காரியத்தை

# அனைத்திந்தியக் காவல் துறையினர் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்டவர்க்கு முதல்வர் விருந்து



35-வது அனைத்திந்திய காவல் துறையினர் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 9.12.'91 அன்று கோவளத்தில் விருந்தளித்தார். அப்போது நாட்டிய நிகழ்ச்சி நடத்திய ராஜா ரெட்டி, ராதா ரெட்டி ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

4.12.91 முதல் 10.12.91 வரை சென்னையில் நடைபெற்ற 35-வது அகில இந்தியக் காவல் துறையினர் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் 9.12.91 அன்று சென்னை அருகே கோவளத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருந்து கொடுத்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா, துணைத் தலைவர் பேராசிரியர் கா. பொன்னுசாமி, அரசு கொறடா க.பா. பட்டாபிராமன் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டார்கள்.

விழாவில் ராஜாரெட்டி, ராதாரெட்டி ஆகியோரின் குச்சுப்புடி நாட்டியம் நடைபெற்றது.

அந்தக் கலை நிகழ்ச்சிக்குப்பின் அனைத்து மாநிலங்களில் இருந்து சென்னையில் நடந்த திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும், தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறை உயர் அலுவலர்கள், வெளி மாநிலக் காவல் துறை உயர் அலுவலர்கள் ஆகியோருக்கும் நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் சொந்தச் செலவில் வழங்கினார்.

முடிக்கும் மனத்திட்பம், அத்றகாகவே தன்னை அர்ப்பணித்தல் போன்ற உயர்ந்த பண்புகளால் சாதித்துள்ளனர். காவல் துறையினரின் இதுபோன்ற விழாக்கள் அவர்களது திறமைகளை வளர்க்கவும், அறிவினைப் பெருக்கிக் கொள்ளவும் அவர்களது தகுதி நிலைகளை உயர்த்திக் கொள்ளவும் உதவும் என நம்புகிறேன்.

கடந்த சிலபல ஆண்டுகளில் காவல் துறையினரின் கடமைகளிலும் பொறுப்புகளிலும் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களது முன்னோர்களுக்குத் தெரியாத பல புதிய கடினமான சோதனைகளை அவர்கள் சந்திக்க வேண்டி உள்ளது. சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள், தொலைத் தொடர்பு, போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களினால் மற்ற நாட்டினருடன் ஏற்பட்டுள்ள நெருங்கிய தொடர்பு, வளர்ந்து வரும் மக்களின் எதிர்பார்ப்பு, நவீனமயமாக்குதல் ஆகிய அனைத்தும் சேர்ந்து காவல் துறைனர், குற்றங்களைத் தடுப்பதையும், குறைப்பதையும் மிகவும் கடினமாகவும் சிக்கலாகவும் ஆக்குகின்றன. காவல் துறையினர் தங்களது முன்னோர்களின்

திறமையை மட்டும் வைத்துக் கொண்டு இப்போது எதையும் சாதிக்க முடியாது. மாறிவரும் காலத்தின் தேவைகளுக்கேற்ப இவர்களின் திறமைகளும், நுணுக்கங்களும், அறிவும், வசதிகளும் பெருக வேண்டும். பழங்காலத்து முறைகளும், சாதனங்களும் ஒத்துவராது. இந்தச் சூழ்நிலையில்தான் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகிறது.

குற்றங்களைக் கட்டுப்படுத்தத் தேவையான அதிநவீன புலன் விசாரணைக் கருவிகளையும் புதுமையான சாதனங்களையும் காவல் துறைக்கு வழங்க வேண்டியது மத்திய-மாநில அரசுகளின் பொறுப்பாகும். மனித சக்தியையும் பொருள் வசதிகளையும் ஒன்று சேர்த்து, திறமையுடன் உபயோகித்து, நாட்டில் அபாயத்தை உருவாக்கிட விழையும் சமூக விரோதச் சக்திகளை அடியோடு ஒழிக்கப் பாடுபட வேண்டியது காவல் துறையினரின் கடமையாகும்.

இந்தத் தேவைகளைத் தமிழக அரசு நன்கு உணர்ந்து, தமிழகக் காவல் துறையினருக்கு, புலனாய்வு, தகவல் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றுக்கான நவீன கருவிகளை வழங்குவதில் முன்னணியில் நிற்கிறது. தகவல் தொடர்பு சாதனங்களில் தமிழகக் காவல் துறை நாட்டிலேயே முதல் இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டின் காவல் துறை வானொலிப் பிரிவு நாட்டிலேயே மிகச் சிறந்ததாகும். குற்றங்களைத் தடுப்பதிலும், குறைப்பதிலும் தமிழகக் காவல் துறை மின்னணுக் கருவிகளையும் விஞ்ஞானத் தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்களையும் தகவல் தொடர்பு சாதனங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்கிறது. ஆசியாக் கண்டத்திலேயே பழைமையான நிறுவனங்களில் ஒன்றும், நம் நாட்டின் மிகச் சிறந்த நிறுவனமுமான தடயவியல்துறையின் தமிழ்நாட்டுப் பிரிவிற்கு மிகச்சிறந்த வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டு உள்ளன. ஆயுதங்கள், தோட்டாக்கள், போக்குவரத்து, திறன்களை வளர்க்கும் பயிற்சி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் காவல் துறையை நவீனப் படுத்தி, காலத்திற்கு ஏற்றதாகச் செய்ய வேண்டிய தேவையை



அமெரிக்காவிலுள்ள கோல்கேட் பல்கலைக் கழகத்தின் இசைத் துறையைச் சார்ந்த 20 மாணவ, மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கொண்ட குழு மாண்புமிகு முதல்வர் அவர்களை, அவர்களது இல்லத்தில் சந்தித்தது (11.12.91).

மாநில அரசு செவ்வனே உணர்ந்திருக்கிறது. இவ்வகையில் தமிழகக் காவல் துறையினைப் பலப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில், இலங்கைத் தீவிரவாதிகளை ஒடுக்குவதிலும், நம் மாநிலத்தில் அவர்களுக்கிருந்த செல்வாக்கினை அழிப்பதிலும், மாநில மக்கள் மனதில் நம்பிக்கையை மீண்டும் நிலை நிறுத்தியதிலும், சட்டம் ஒழுங்கை நீதியுணர்வோடும், அழுத்தந்திருத்தமாகவும் நிலைநாட்டும் தகுதியிலும், தமிழகக் காவல் துறையினர் சாதித்த வெற்றியை நான் பாராட்டக் கடமைப்பட்டு உள்ளேன்.

எனினும், நம் பணி முடிந்துவிடவில்லை. நம் திறமைகளை நாம் வளர்த்துக் கொள்ளாவிடில், சில சமூக விரோத சக்திகளின் காரணமாக, சட்டம், ஒழுங்கு பிரச்சினைகளும், குற்றங்களைத் தடுப்பது மிகவும் சிக்கலாகிவிடும். இது அனைத்து மாநிலப் பிரச்சினையாக விளங்கப் போகிறது. இதைச் சமாளிக்க நிறைய நிதி வசதி தேவை. ஆனால், பல மாநிலங்கள் தங்களது காவல் துறையை நவீனப் படுத்துவதற்குரிய நிதிவசதி இல்லாத நிலையில் உள்ளன. எனவே, நிதி நிலை தேவையுள்ள மாநிலங்களுக்கு, குறிப்பாக தீவிரவாதிகளாலும் பயங்கரவாதிகளாலும் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு, நிலைமையையுணர்ந்து நிதி உதவி அளிக்க வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

தமிழக அரசு இது குறித்து மத்திய அரசை அணுகி உள்ளது. நமது கோரிக்கையை மத்திய அரசு சாதகமாகப் பரிசீலிக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு என்னை முக்கிய விருந்தாளியாக அழைத்தமைக்கு மீண்டுமொருமுறை என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலத்தில் நிறைய சவால்களை வெற்றிகரமாகச் சமாளித்த நம் காவல் துறை, மக்கள் நலன்களை உறுதியுடன் காப்போம் என்னும் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி நடைபோடும் என்று நான் நம்புகிறேன்.

இந்தியக் காவற்படை உலகிலேயே இணையற்ற காவற்படைகளில் ஒன்றாகவும், இந்த நாடு நியாயமாகப் பெருமை கொள்ளத்தக்க நல்லதோர் படையாகவும் விளங்கும் என்னும் என் நம்பிக்கையைப் புலப்படுத்திக் கொண்டு, என் நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.



# அனைத்திந்தியக் காவல் துறையினர் செயல் திறன் போட்டி - 1991

35-வது அனைத்திந்தியக் காவல் துறையினர் செயல் திறன் போட்டி நிறைவு விழா 10.12.91 அன்று மாலை சென்னை எழும்பூர் இராஜ ரத்தினம் விளையாட்டரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு போட்டியில் வெற்றிபெற்ற வர்களுக்குப் பரிகள் வழங்கினார்.

விழாவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை 4.30 மணிக்கு, எழும்பூர் இராஜரத்தினம் விளை யாட்டரங்கத்திற்குள், குதிரைப்படை வீரர்கள் புடைசூழ்ந்து வரவேற்க வருகை தந்தார். காவல் துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், ஐ.பி.எஸ். அவர்கள், முதல்வர் அவர்களுக்கு மற்ற அலுவலர் களை அறிமுகம் செய்துவைத்தார்.

பின்னர், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த காவல் துறையினரின் அணி வகுப்பு நடைபெற்றது. அணி வகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

திரு. எஸ்.சி. மேத்தா (தனி ஐ.ஜி.-ஐ.பி.) அவர்கள் வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழகக் காவல் துறை அலுவலர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தமிழ்நாடு காவல் துறை சார்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, நினைவுப் பரிசு ஒன்றைத் தமிழகக் காவல் துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், ஐ.பி.எஸ். அவர்கள் வழங் கினார். பின்னர் பிரதமரின் போலீஸ் பதக்கங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள், வீர தீரச் செயல் புரிந்த பல் வேறு மாநிலங்களைச் சேர்ந்த 11 காவல் துறையினருக்கு வழங்கினார்.

பிறகு, பல்வேறு துறைகளில் வெற்றி பெற்ற காவல் துறையினருக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதக்கங்களையும், பரிசுக் கோப்பை களையும் வழங்கிச் சிறப்புரை ஆற் றினார்.

காவல் துறை அணிவகுப்பு முடி வுற்ற பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், துப்பாக்கியைச் சுட்டு மாலை நேர நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்தார்.

இரயில்வே பாதுகாப்புப் படை யைச் சேர்ந்தவர்கள், வீர விளையாட்டுக் களைச் செய்து காட்டினர். ஆங்கிலத்தில் WELCOME என்று வடிவமைத்து அழகுற நின்றார்கள்; பிறகு மூன்று பேர்கள் சேர்ந்து ஒட்டமாக வடி வெடுத்து, அதன்மேல் ஒருவர் சவாரி செய்வதுபோல் செய்து காட்டினர். பிறகு அவர்கள் ஹௌரா பாலம் போன்று ஒருவர் மேல் ஒருவர் நின்று தோற்றமளித்தனர். பிறகு, தேரில்

நின்றுகொண்டு போருக்குச் செல்வது போலவும் செய்து காட்டினர். பின்னர் தேன்கூடு போலவும், கோபுரம் போல வும் அணிவகுத்துக் காண்போரை மெய்சிலிர்க்க வைத்தனர்.

அதன்பின் அனைவரும் அணி வகுத்து உடற்பயிற்சி செய்துகாட்டினர். வரிசையாக நின்று மனித அலை (Human Waves) உருவாக்கி, காண் போரைக் களிப்புறச் செய்தனர். பிறகு நீரூற்றுப் போலவும், நடனம் போலவும் குறுக்கும் நெடுக்குமாக நடந்தும் வியக்கச் செய்தார்கள்.

அதைத் தொடர்ந்து, காவல் துறை துப்பறியும் நாய்களின் சாகசங்கள் நிகழ்த்தப்பட்டன. ஒரு துப்பறியும் நாய், மலர்க்கொத்து ஒன்றை வாயில் கவ்விக் கொண்டுவந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கொடுத்தது; முதல்வர் அவர்கள் அதை மகிழ்ச்சி யுடன் பெற்றுக் கொண்டு, அதைத் தட்டிக் கொடுத்தார்; பிறகு அது முதல் வருடன் கை குலுக்கியது.

நாய்கள் வளையங்களில் தாவியும், நெருப்பு வளையங்களுக்குள் தாவியும் சாதனை பல நிகழ்த்திக் காட்டின. பிறகு சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்து சவாரி செய்தன. உயரமான, படிகளைக் கொண்ட ஏணியில்ஏறித் தாவிக்காட்டின.

பின்னர், இரயில்வே பாதுகாப்புப் படையினர், கையில் தீப்பந்தங்களை ஏந்தி வந்து உடற்பயிற்சி செய்து காட்டினர். அவர்கள் தீப்பந்தங்களுடன் பல எழுத்து வடிவங்களையும் அமைத்து- பார்ப்போரை மகிழ்ச்சி கொள்ளச் செய்தனர்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து, ரிவால்வர் சுடும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற தமிழகக் குழுவுக்கு ரூ.10,000-மும், ரைபில் சுடும் போட்டியில் வெற்றி பெற்ற எல்லைப் பாதுகாப்புப் படைக்கும், மத்திய ஆயுதக் காவல் படைக்கும் தலா ரூ.5,000-மும், தமிழக இரயில்வே காவல் படையைச் சேர்ந்த குழுவிற்கு ரூ.10,000-மும் வழங்கினார்.

விழா முடிவில் வண்ணமிகு வாண வேடிக்கைகள் கண்ணைக் கவர்ந்தன!

- நிகழ்ச்சித் தொகுப்பு:
இரா. இராஜசேகரன்



அனைத்திந்தியக் காவல் துறைத் துப்பறியும் போட்டி களில் 'சாம்பியன் பட்டம்' பெற்ற தமிழகக் காவல் துறைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளிக் கோப்பையைத் தமிழக காவல் துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால் அவர்களிடம் வழங்கினார்.

சிறந்த துப்பாக்கி சுடும் மாநில அணிக்கான வெள்ளிக் கோப்பையைப் பெற்ற தமிழகக் காவல் துறைக்கு, அதன் ஐ.ஜி. திரு. டபிள்யூ. ஐ. தேவாரம் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளிக் கோப்பை வழங்கினார்.





# தீரச்செயல் புரிந்த காவலருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.10,000 வழங்கினார்

**6.12.1991** அன்று இரவு 11.30 மணி யளவில், சென்னை வண்ணாரப்பேட்டையில் உள்ள, தொற்றுநோய் மருத்துவமனை வளாகத் தில் ஆந்திரச் சாராயத்தைக் கள்ளத்தனமாகக் கடத்தி வந்த ஒரு வாகனத்தை திரு. ராமர் என்ற முத்தியால்பேட்டைக் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் தடுத்து நிறுத்திப் பிடிக்க முயலுகின்றார்.

அப்போது, வாகனத்தைக் காவலர் மீது மோதி இடித்துத் தள்ளிவிட்டுச் செல்ல முயன்றிருக் கிறார்கள். ஆனாலும், போலிஸ் காவலர் திரு. ராமர், வாகனத்தில் தொற்றிக் கொண்டு வீர ஆவேசத்துடன் போராடியதுடன் உடலில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டும், குற்றவாளி யைப் பிடிக்கவேண்டும் என்ற கடமையுணர்வுடன் தொடர்ந்து போராடி அந்த வாகனத்தைப் பிடித்த அவர் வீரமும் கடமை உணர்வும் பாராட்டத் தக்கதொன்றதாகும்.

உடலில் படுகாயத்துடன் ஸ்டான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள போலிஸ் காவலர் திரு. ராமரை 8.12.91 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று பார்த்து ஆறுதல் கூறியதுடன், அவருடைய தீரத்தையும், கடமையுணர்வையும் பாராட்டி ரூ.10,000 தன்னு டைய சொந்தப் பணத்திலிருந்து அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார்

மருத்துவமனையில் திரு. ராமரின் மனைவி மற்றும் மகன் ஆகியோர் கண்கலங்கி நின்றபோது அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆறுதல் கூறித் தேற்றினார் காவலர் திரு. ராமருக்கு மிச் சிறப்பான மருத்துவ வசதிகள் செய்து கொடுக் கும்படி தலைமை மருத்துவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்தத் தீரச்செயல்களின் மூலம் காவலர் திரு. ராமர் காவல் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் மற்றும் தமிழகத்தில் உள்ள இளைஞர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார் என்றும் அவருடைய செயல்களின் மூலம் திரு. ராமர் காவல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாராட் டினார்.

மருத்துவமனைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ.மதுசூதனன், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், காவல்துறைத் தலைவர் திரு. எஸ்.ஸ்ரீபால், காவல் துறை ஆணையர் திரு. ஆர்.ராஜகோபாலன், இன்ஸ்பெக்டர் ஜெனரல் (மதுவிலக்கு) திரு. அலெக்ஸாண்டர் ஆகியோர் உடன் சென்றனர். மாண்புமிகு முதல்வர் அவர் களின் வருகையை அறிந்து சாலைகளின் இருமருங் கிலும் மருத்துவமனை அருகிலும் ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர்.

# ஐந்து ஆண்டுகளில் சென்னை மாநகர் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெறும்!

## புதிய மூர்மார்க்கெட் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

சென்னை நகரத்தின் இதயமாய் இருக்கிற இந்த இடத்தில், பல்வேறு சிறப்புகள் நிறைந்த பல பொருள் விற்பனை அங்காடியான புதிய மூர்மார்க்கெட்டைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நல்ல திட்டத்திற்கு வித்திட்டவர் நமது இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன் சென்னை மூர்மார்க்கெட்டில் ஏற்பட்ட தீ விபத்து அதனை முழுமையாக அழித்தது. அன்று அந்த இடத்தைப் பார்வையிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தன் முன்னே கதறி அழுதவர்களைக் கண்டு கண் கலங்கினார்; ஆறுதல் கூறினார். ரூபாய் 10 கோடிக்கும் மேலான தீ விபத்து சேதத்தைப் பார்த்து மனம் வருந்தினார். இனி இதுபோல ஒரு கோரச் சம்பவம் நிகழக்கூடாது என்று முடிவெடுத்தார். அதன்படி மூர் அங்காடியில் கடை வைத்திருந்த 857 பேர்களுக்கும் இனி அல்லிக்குளம் பகுதியில் கடைகளை அமைக்க வேண்டுமென ஆணையிட்டார். அவரது நல்ல எண்ணம்தான் இன்று மூன்றடுக்கு மாடியுடன் புதிய மூர்மார்க்கெட்டாக உருவெடுத்துள்ளது. அதனைத் திறந்து வைக்கும் நல்வாய்ப்பினை நான் இன்று பெற்றுள்ளேன். உங்களுக்கு நன்றாகவே தெரியும். புரட்சித் தலைவர் விட்ட பணிகளைத் தொடர்வதையும், அவர் தொட்டுச் சென்றுள்ள செயல்களை முடித்து வைக்கவேண்டியதையும், எனது தலையாய கடமையாக நான் கொண்டிருக்கிறேன் என்று.

இந்த விழாவிற்கு வருகின்ற வழியில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் திருவுருவச் சிலைகளைப் பார்த்துக்கொண்டே வந்தேன். அந்த மகத்தான மாமனிதர்கள் மக்களுக்கு ஆற்றிய பணிகளை நினைவில் கொண்டேன். அவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து தொய்வில்லாது ஏற்று நடத்துவது என் கடமை. 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற அவர்களது தத்துவத்தைத்தான் நான் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறேன்; அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பேன் என்ற உறுதியை நான் இந்த விழாவில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'குஜிலி பஜார்' என்று வழங்கப்பட்ட இடம், பிறகு 'மூர்மார்க்கெட்' என்று அழைக்கப்பட்டு, மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றது. முன்பு பிராட்வே பகுதியிலிருந்த அங்காடியை மாற்றித்தான், இந்த மூர்மார்க்கெட் 1900-இல் திறக்கப்பட்டது. இப்போது மூர் அங்காடி அல்லிக்குளம் பகுதியில் அவசியம் காரணமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

அன்றைக்குச் சென்னை மாநகராட்சியின் தலைவரால் கட்டப்பட்ட மூர் அங்காடியை, சென்னையின் ஆளுநர் திறந்து வைத்தார். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டிய இந்த அங்காடியை இன்று உங்கள் அன்புச் சகோதரியான நான் திறந்து வைக்கிறேன்.

ஏறத்தாழ ஏழு கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தால் கட்டப்பட்டுள்ள இந்த அங்காடி, மூன்று அடுக்கு மாடிகளைக் கொண்டது. கட்டடத்தின் நாற்புறமும் எழில் சேர்க்கும் வண்ணம், அமைக்கப்பெற்றுள்ள மினாரட் அமைப்புகள், முகலாயக் கட்டடக் கலையை நமக்கு நினைவுபடுத்துகின்றன.

ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் சதுரஅடி பரப்பு கொண்ட இந்த மூன்றடுக்குக் கட்டடத்தில், 859 கடைகள் அமைக்கப்பட்டு உள்ளன. அங்காடிக்குள்ளேயே உணவகம், அங்காடி வளாகத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற பல வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. நவீன தீத்தடுப்பு அமைப்புகள் அனைத்தும் இக்கட்டடத்திலேயே பொருத்திவைக்கப்பட்டுள்ளன.

மூர்மார்க்கெட், சீரிய கருத்துக்கள் கொண்ட பழமை வாய்ந்த அரிய புத்தகங்கள் கிடைக்கக்கூடிய இடமாக இருந்ததைப் பற்றிச் சிறப்பாக எவரும் பேசியதில்லை. ஆனால், பல்வேறு நாடுகளைச் சார்ந்த பழைய பொருட்கள் குறைந்த விலையில் விற்கப்படும் அங்காடி என்கிற அதன் சிறப்பே பலராலும் பேசப்பட்டது; இன்றைக்கும் பேசப்படுகிறது.

இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

சொல்லப்பட வேண்டிய உண்மைகளும், பெருமைகளும், சரியான நேரத்தில் சொல்லப்படாவிட்டால், தள்ளப்பட வேண்டிய சிலரின் தற்காலிகப் புகழ் நிரந்தரமாகி விடுவதற்கு வழி வகுத்துவிடும்.

சுருக்கமாகச் சொன்னால், தலைமை சரியாக இருந்தால்தான் நாட்டின் நிலைமையும் சரியாக இருக்கும்.

பல ஆண்டுக் காலமாகவே நகரத்தை நரகமாக்குகிற முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதிலும், பொது இடங்களைத்தங்களது பொழுதுபோக்கு மையமாக்க மாற்றுவதிலும், சொந்த நலனுக்காகப் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வதிலும் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் மற்றவர்களுக்கும், சமுதாயத்திற்கும் ஏற்படுகிற கஷ்டங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற தத்துவத்தையே மாற்றி, கூடி வாழ்வதே கோடிப் பிரச்சினை என்று மாற்றும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களது முயற்சிகளை முற்றிலுமாக முறியடிப்போம் என்று திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

மக்களுக்காக அரசு திட்டமிட்டுச் செலவழிக்கின்ற பணம், அதன் நோக்கத்தை நிறைவு செய்கிறதா, மக்களைப் போய் அடைகின்றதா என்கிற கேள்விக்குறி, சில காலமாகவே நம் முன்னே எழுந்து நிற்கிறது.

ஒரு கை தட்டினால் ஓசை எழாது, இரு கைகளும் இணைந்தால்தான், ஒலி எழும்பும். அரசு ஒரு கை; மக்கள் மறு கை. ஆகவே, அரசோடு மக்கள் ஒத்துழைத்தால்தான், மக்களின் நல்வாழ்விற்குரிய நல்ல பல திட்டங்கள் காலத்தோடு செயல்படுத்தப்பட்டு அதன் பலன் மக்களைச் சென்றடையும். எந்தக் காரணத்திற்காகத் திட்டங்கள் தொடங்கப்படுகின்றனவோ, அதனை நாம் நிறைவு செய்ய இயலும்.

விஞ்ஞானத்தின் விளைவுகளால் நமது ஆயுளைப் பெருக்கிக்கொள்ள பல வழிவகை கண்டறிந்த நாம், நம்மைச் சுற்றியிருக்கிற சூழ்நிலையைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ள அக்கறை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

நாம் வாழ்கிற சுற்றுப்புறங்களைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ள நாம் இன்னும் பக்குவப்படவில்லை என்றால், நாம் இது வரை பெற்ற நாகரிகத்திற்கு அர்த்தமே இல்லை.





**''எழில்மிகு சென்னை 2000'' எனும் திட்டத்தின்கீழ் சென்னையில் புதிய மூர்மார்க்கெட் வளாகத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.**

---

நடைபாதைகள் கடைவீதிகளாக மாறியுள்ளன; நமது நாட்டில் நடைபாதைகளே நம்மை நடக்கவிடாமல் கட்டுப்படுத்துகின்ற காரியத்தைச் செய்கின்றன. வயிற்றுப் பிழைப்பிற்காக நடைபாதைகளில் கடைகள் அமைத்து வருவாய் ஈட்டும் ஏழை எளியவர்களைப் பாதிக்காத வகையிலும், அவர்களது தொழில் நடைபாதைகளில் நடந்து செல்வோருக்கு இடையூறு விளைவிக்காவண்ணமும் இருக்குமாறு, ஒரு திட்டம் வகுக்க நினைத்தேன்.

**நடைபாதைக் கடைகளை நடத்தி வரும் நலிவுற்றோருக்கு, நல்ல இடங்களில் கட்டடங்கள் அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தையும் பரிசீலனை செய்து வருகிறேன். இத்திட்டத்தின்கீழ், தற்போது அவர்கள் தொழில் புரிந்து வரும் பகுதிகளிலேயே, நிரந்தரக் கடைகளை வாடகைக்கு அமைத்துக் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். இதற்கான திட்டம் விரைவில் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

ஏழ்மை அசுத்தமாகத்தான் இருக்க வேண்டுமென்பதல்ல; எளிமை சுகாதாரமானது என்பதே நமது நாட்டின் கொள்கை. சமீபத்தில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நான் சந்தித்தபொழுது, அவர்கள் சுகாதாரமற்ற சூழ்நிலையில் வசிப்பதைக் கண்டேன். குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டு, பலமாடிக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டும், அவற்றில் உண்மையாகவே குடிசையில் வாழ்ந்தவர்கள்தான் குடியிருக்கின்றார்களா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. அரசு திட்டங்கள் உரியவரைப் போய்ச் சேரவேண்டும் என்பதில் நான் மிக உறுதியாக இருக்கின்றேன்.

**சென்னை நகரில் புதிய குடிசைப் பகுதிகள் தோன்றாமல் தடுக்கவும், ஏற்கெனவே குடிசைகளில் வாழும் மக்களுக்கு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்யவும், அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.** எனவே, இருக்கிற குடிசைகளை அகற்றுவதோடு, இனி அவைகள் எந்த உருவிலும் சென்னை நகரில் உருவாகாமல் தடுப்பதும் அரசின் கடமையாகும். அதில் வாழ்ந்துவரும் ஏழை எளிய மக்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை உருவாக்கித் தருவதில், இந்த அரசு முன்னுரிமை கொடுத்து செயல்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் முயற்சிகளுக்கு குடிசைவாழ் மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரின் குடிநீர் வசதிக்கு ஆதாரமாக அமைந்துள்ள மூன்று ஏரிகளும் சமீபத்தில் நிறைந்து, அவை உடைபடாமல் தடுக்க, சென்னை நகருக்குத் தேவையான ஓராண்டுக் காலக் குடிநீர் அளவிற்குக் கடலில் திறந்துவிடப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அதிகப்படியான மழை நீரைச் சேமித்து வைக்கப்போதிய வசதிகள் இல்லாத நிலையில், குடிநீர் வீணானது. இனியும் இதுபோல் நிகழாவண்ணம் தடுப்பதற்காக, சென்னை அருகே மேலும் இருபெரும் நீர்நிலைகளை உருவாக்கி, குடிநீரைச் சேமித்து வைக்கவேண்டுமென ஆணையிட்டுள்ளேன். அப்பணி நிறைவு பெற்ற

பின்பு, கூடுமான அளவிற்குச் சென்னை நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கவும், தேவையான அளவு குடிநீர் வழங்கவும் முடியும்.

சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக தெலுங்கு-கங்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் அத்திட்டத்தை, கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கவனம் செலுத்தாது கிடப்பில் போட்டுவிட்டனர். எங்கள் அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், தொடங்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் முடுக்கிவிட்டு, அவை துரிதமாக முடிக்கப்பெற வேண்டுமென்றும், அவற்றின் பலன் மக்களை விரைவில் வந்தடைய வேண்டுமென்றும் உறுதியான முடிவு எடுத்து, அதன் அடிப்படையில் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. அதன்படி தெலுங்கு கங்கைத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்காக நாங்கள் எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளின் பலனாக, ஆந்திர மாநிலத் தலைமைச் செயலர் மற்றும் உயர்மட்ட அரசு அலுவலர்கள், சென்ற 25.11.1991 அன்று சென்னை வந்து, நமது மாநிலத் தலைமைச் செயலர் மற்றும் அரசு அலுவலர்களுடன் கலந்துரையாடிச் சென்றுள்ளனர். நானும் விரைவில் ஆந்திர முதல்வர் டாக்டர் ஜனார்த்தன ரெட்டி அவர்களை நேரில் சந்தித்து, இத்திட்டத்தைத் துரிதப்படுத்தி முடிக்க, தேவையான வழிமுறைகளை வகுக்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்ற வீராணம் குழாய்களையும், சென்னை மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தில் பயன்படுத்த இயலுமா என்றும், அரசு பரிசீலனை செய்து வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு தொடர்ந்து, அடுத்தடுத்து மென்மேலும் கொத்துக் கொத்தான நன்மைகளை, மக்களிடம் கொண்டுவந்து குவிக்கும் எண்ணம் கொண்டுள்ளது என்பதை, இவ்வினிய நிகழ்ச்சியோடு இணைக்கப்பட்டுள்ள பிற விழாக்களைப் பார்த்தாலேயே உங்களுக்குத் தெரியும். 'எழில்மிகு சென்னை 2000' திட்டப் பணிகளைத் தொடங்கி வைப்பதிலும், மாநகர வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைப்பதிலும் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**சென்னை மாநகர் சிறப்படைய, வரும் ஐந்தாண்டுகளில் 1,250 கோடி ரூபாய் செலவில், பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 600 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வடிகால் வசதிகள், கழிவுநீர் அகற்றும் பணிகள் ஆகியவைகளையும், 225 கோடி ரூபாய் செலவில் மின் வசதிப் பெருக்கமும், 200 கோடி ரூபாய் செலவில் மேல் நிலைப் பேருந்துப்பாதை உள்ளிட்ட போக்குவரத்து வசதியும், 135 கோடி ரூபாய் செலவில் தெரு விளக்கு, மழைநீர் வடிகால் கழிவுப் பொருட்கள் அகற்றும் பணிகளும், 75 கோடி ரூபாய் செலவில் வீட்டு வசதி குடிசைப்பகுதி மேம்பாடு, மற்றும் 15 கோடி ரூபாய் செலவில் புறநகர் வளர்ச்சிப் பணிகள் ஆகியவைகளும் நிறைவேற்றப்படவுள்ளன என்பதை அறிவிப்பதில், பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். இன்னும் ஐந்தாண்டுகளில் சென்னை மாநகர் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெறும் என்பது திண்ணம். இத்தகைய பணிகள் சென்னை நகருக்கு மேலும் எழில் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.**

இந்த நேரத்தில் என் மனதில் சில பழைய நினைவுகள் நிழலாடுகின்றன. நம் இதயதெய்வம் புரட்சித்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக் கோட்டுகளை வழங்கினார்.





**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கினார்.**

தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆரம்ப காலத்தில் சென்னையில் ரிக்ஷா தொழிலாளர்களுக்குத் தன்னுடைய சொந்தச் செலவில் மழைக் கோட்டு வழங்கி, நடிகர்களும் ஏழை எளியவர்களுக்கு உதவ முடியும் என்ற புதிய மனிதாபிமான தத்துவத்தைத் தொடங்கி வைத்தார். அந்த வள்ளலின் கொடைத்தன்மையின் வழியில், இன்று இலவச மழைக் கோட்டு வழங்கும் நிகழ்ச்சியும் அமைந்துள்ளது.

இன்றைய தினம் தமிழ்நாட்டில் நகரப் பஞ்சாயத்து, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணி புரியும் ஏறத்தாழ 33,000 துப்புரவுப் பணியாளர்களுக்கு, 95 இலட்சம் ரூபாய் செலவில் மழைக் கோட்டுகளை இலவசமாக வழங்க உள்ளேன். இந்த நிகழ்ச்சியில் நான் துப்புரவுப் பணியாளர்களுக்கு இலவசமாக மழைக்கோட்டு வழங்குவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

**நகரிலுள்ள பூங்காக்களை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சாலைகளைச் சீரமைத்து சிறப்பாகப் பராமரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

ஒருசில பகுதிகளில் சமூகசேவை அமைப்புகள் தாமாகவே முன்வந்து, ஒரு சில தெருக்களைத் தற்போது நல்லமுறையில் பராமரித்து வருகின்றன. இப்பணியில் ஈடுபட்டுள்ள Exnora போன்ற அமைப்புகளை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை மாநகரை அழகுபடுத்த அரசும், ஆர்வமுள்ள ஒரு சில அமைப்புகளும் பல திட்டங்கள் கொண்டு வரலாம். ஆனால், அவற்றின் முழு வெற்றி, அத்திட்டங்களில் மக்களின் ஈடுபாடு எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்தே அமையும்.

எனவே மாநகர மக்களின் மத்தியில், ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். அதற்கு மாநகராட்சி மட்டுமல்ல, எல்லா மக்கள் தொடர்புச் சாதனங்களும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு ஒருமித்த செயலைத் தொடர்வோமேயானால், எழில்மிகு சென்னை 2000-த்தின் தோற்றம், வடிவெடுப்பதை இரண்டே ஆண்டுகளில் நாம் காண முடியும்; சென்னை நகரைத் தூய்மைப் பகுதியாகப் பார்த்துப் பரவசமடைய முடியும்.

நாம் எய்தத் திட்டமிட்டுள்ள இலக்கான 'எழில்மிகு சென்னை 2000' என்பது வெகுதூரத்தில் இல்லை. வெறும் அடுக்குமாடிக் கட்டடங்களும், அகலமான சாலைகளும் மட்டுமே, எழிலான சென்னை நகரமாக ஆகிவிடாது. இந்த நகரத்தில் வாழுகிற ஒவ்வொரு மனிதனுக்கும் பாதுகாப்பு, அடிப்படை வசதிகள், ஆரோக்கியப் பின்னணி ஆகியவற்றினை வழங்குகிற நிலையில்தான், எழில்மிகு சென்னையின் இதயத்துடிப்பு இருக்கிறது. அந்த இதயத்தைத் தொடர்ந்து இயங்க வைக்கிற ஆற்றல், பொதுமக்களாகிய உங்களிடம்தான் இருக்கிறது என்பதை நினைவூட்டி, சென்னை மாநகரை அழகுபடுத்துவோம். அனைத்து வசதிகளையும் அமைத்து தருவோம்.

**(எழில்மிகு சென்னை 2000-மூர்மார்க்கெட் வளாகத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை)**

# எழில்மிகு சென்னை 2000

சென்னை மாநகரத்தை எழில் கொஞ்சும் நகரமாக விளங்கச் செய்திட 'எழில்மிகு சென்னை 2000' எனும் திட்டத்தின்கீழ் சீர்மிகு திட்டங்கள் செவ்வனே தீட்டப் பட்டுள்ளன. இதன்கீழ் ஐந்தாண்டு களில் நிறைவேற்ற ரூ.1,250 கோடி மதிப்பீட்டில் மகத்தான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்ற லுக்கு ரூ.600 கோடி - மின் வசதிப் பெருக்கத்திற்கு ரூ. 225 கோடி - மேல்நிலை பேருந்து பாதை உள் ளிட்ட போக்குவரத்து வசதிகளுக்கு ரூ.200 கோடி - தெரு விளக்கு மழைநீர் வடிகால் கழிவுப் பொருட்கள் அகற்றுதல் முதலான மாநகரப் பணி களுக்கு ரூ.135 கோடி - வீட்டுவசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட் டிற்கு ரூ.75 கோடி - புறநகர் வளர்ச்சிக்கு ரூ.15 கோடி என மொத்தம் ரூ.1,250 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

28.11.1991 அன்று மாலை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்ட கோலாகலமான இவ்வினிய விழா 'எழில்மிகு சென்னை 2000'-த்தின் தொடக்க விழாவாகவே திகழ்ந்தது.

நவீன பொருட்கள், அபூர்வ மான பழைய புத்தகங்கள், மீன்கள் என எந்தப் பொருட்களும் இங்கு கிடைக்கும் என்ற வகையில் புகழ் பெற்று, மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்று இருந்த 'மூர் மார்க்கெட்', லெப்டினன்ட் கர்னல் ஜார்ஜ்மூர் என்பவரால் 1899-ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பெற்றது. 1900-ஆம் ஆண்டில் அவர் பெய ராலேயே 'மூர் மார்க்கெட்' என வழங்கப்பெற்றது. அத்தகைய வர லாற்றுச் சின்னமாக விளங்கிய மூர் மார்க்கெட் 1985-ஆம் ஆண்டு மே திங்கள் 29-ந் தேதி நள்ளிரவில் தீக்கிரையாகியது. அதில் இருந்த 857 கடைகளும் எரிந்து சாம்ப லாயின.

இந்த விபத்தையடுத்து, பழைய மூர்மார்க்கெட் இருந்த இடத்துக்குப் பின்னால் உள்ள அல்லிக்குளம் பகுதியில் ரூபாய் ஏழு கோடி செல வில் மூன்று அடுக்கு மாடிகளுடன் இந்தப் புதிய மூர்மார்க்கெட்டைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இதில் 859 கடைகள் அமைந்துள் ளன. பழைய மூர் மார்க்கெட்டில் கடை வைத்திருப்பவர்களுக்குப் புதிய மூர்மார்க்கெட்டில் கடை வைத்துக்கொள்ள முன்னுரிமை வழங்கப்படும். சென்னை நகரில் அழகுக்கு அழகு சேர்க்கும் கட்டடங் களில் ஒன்றாக விளங்கும் புதிய மூர்மார்க்கெட் புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

எழில்மிகு சென்னை 2000 - மூர்மார்க்கெட் வளாகத் திறப்பு விழா மற்றும் துப்புரவுத் தொழி லாளர்களுக்கு இலவச மழைக் கோட்டு வழங்கும் இவ்வினிய விழாவிற்கு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர், திரு அழகு திருநாவுக்கரசு அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், திரு இ. மதுசூதனன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாண்புமிகு நிதியமைச்சர், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் புதிய மூர்மார்க்கெட் வளாகத்தைத் திறந்து வைத்தார். 33,269 துப்புர வுத் தொழிலாளர்களுக்கு ரூ.95 இலட்சம் செலவில் இலவச மழைக் கோட்டு அரசு வழங்குவதன் அடை யாளமாக, சென்னை மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மழைக்கோட்டுகளை வழங்கினார்.

பிறகு, வண்ணாரப்பேட்டைக் கோட்ட அலுவலகம், பேசின் பாலத்தில் தொழிலாளர்களுக்கான இரவு நேரத் தங்குமிடம், மேட்லி சாலையில் சுரங்கப் பாதை, ஏழு கிணறு, வியாசர்பாடி, கொளத்தூர் பகுதிகளில் குடும்ப நல மையங்கள், ராதாகிருஷ்ணன் நகர், செரியன் நகர், மறைமலை அடிகள் நகர், கீழ்ப்பாக்கம்(தெற்கு) புதுப்பேட்டை, தியாகராய நகர் (தெற்கு) நாகம்மை நகர் ஆகிய பகுதிகளில் நல வாழ்வு மையங்கள் முதலானவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்.

கண்ணப்பர் திடலில் தொழி லாளர்களுக்கான இரவு நேரத் தங்கு மிடம், வேளச்சேரி பாலம், கற்பகம் நகர் இணைப்புப் பாலம். அயனாவரம் யுனைடெட் இந்தியா நகர் குடும்ப நல மையங்கள் மூர் மார்க்கெட் குடும்பநல வளாகம் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். சென்னையில் அண்மையில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட ஏழை களுக்கு இலவச அரிசியும், வெள்ள நிவாரணத் தொகையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். நகராட்சிகளின் சார்பில் சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர் (பொறுப்பு), திரு என். ஹரி பாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோவில் பராமரிப்பு நிதிக்கு ரூ.1,08,000 வழங்கினார்.

சென்னை மாநகராட்சி ஆணையர், திரு மா. இராமு, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறை வுற்றது.

விழா த்தொடக்கத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக இசைக்குழு வின் இன்னிசைக் கச்சேரி நடத்தப் பட்டது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.




## மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் ஆலோசனை

**மா**ண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் 4.12.1991 அன்று தலைமைச் செயலகத்தில் வனத்துறை அலுவலர்களுடன் இத்துறையின் முன்னேற்றம் பற்றி ஆலோசனை நடத்தினார். நடப்பாண்டிற்கான திட்டப் பணிகள் பற்றியும், வரும் 1992-93- ஆம் ஆண்டிற்கான திட்டம், வளர்ச்சிப் பணிகள் பற்றியும் ஆய்வு செய்தார்.

சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத்துறைச் செயலர், முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர், தலைமை வனப் பாதுகாவலர்கள், வனப் பாதுகாவலர்கள், கோட்ட வன அலுவலர்கள் உள்ளிட்ட சுமார் 80 பேர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர். சந்தன மரக் கடத்தல்களைத் தடுப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டது.

கர்நாடக மாநிலத்தில் உள்ளதைப் போல கடத்தல்களில் பயன்படுத்தப்படும் வாகனங்களையும் உடனடியாகப் பறிமுதல் செய்வதுடன், ஏலத்தில் விற்பனை செய்வதற்குமான வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவது பற்றியும் ஆராயப்பட்டது.

சந்தன மரக் கடத்தல் அதிகம் நடைபெறும் பகுதிகளில் பணியாற்றும் வனத்துறை அலுவலர்களுக்கு, வாகனங்கள், நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள் ஆகியவை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருப்பதாகவும், இவற்றைப் பயன்படுத்தி கடத்தல்காரர்களைப் பிடிப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும் விழிப்புணர்வுடனும் அக்கறையுடனும் செயல்படவேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

வன வளத்தை மேம்படுத்துவதையும், வனப் பாதுகாப்பையும் வலியுறுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சமூக நலத் திட்டங்களையும், வனப் பகுதிகளை அதிகரிப்பதையும், விறகு, காகிதக் கூழ் மரங்களை மேலும் மேலும் அதிகம் உற்பத்தி செய்வதையும் உடனடி நடவடிக்கையாக மேற்கொண்டு செயல்படவேண்டுமென்று அறிவுறுத்தினார்.

வனத்துறையில் உள்ள அலுவலர்களுக்கு ஏதேனும் குறைகள் உள்ளனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். வனத்துறை சிறப்புடன் செயல்பட்டு புதிய வளர்ச்சியைப் பெறவேண்டும் என்ற மாண்புமிகு முதல்வரின் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற வகையில், அனைத்து அலுவலர்களும் சிறப்புடனும் உற்சாகத்துடனும் பணியாற்றி, அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.



கொடிநாளையொட்டி மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெயஸ்ரீ பாலச்சந்தர் இ.ஆ.ப. அவர்களிடம் கொடி நாள் நிதி வழங்கினார் (5.12.'91).

## — தொழுநோய்

# சமுதாயத்தின் கண்ணோட்டம் மாறவேண்டும்



நமது நாட்டில், தொழுநோய்க் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் சமூகசேவை அமைப்புகள் மிக முக்கியப் பங்கை வகிக்கின்றன. ஏறத்தாழ 250 அமைப்புகள் தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. சுகாதாரக் கல்வி, மறுவாழ்வுச் சேவைகள் முதலியவற்றில் அவை ஈடுபட்டுள்ளன. அரசு, பலவகைகளில் இந்த அமைப்புகளுக்கு உதவி செய்து வருகிறது.

நோயால் ஊனமடைந்த நோயாளிகளின் உடல்வடிவத்தை மேம்படுத்துவதில் மறுசீரமைப்பு அறுவைச் சிகிச்சை நிலையங்கள் ஈடுபட்டுள்ளன.

நோயாளிகளுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்கள் அங்கம் வகிக்கும் சமூகத்திற்கும் சுகாதாரக் கல்வியை அளிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. பொதுமக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகவும் செய்திகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. தற்போது, நோயாளிகளில் ஏறத்தாழ 90 சதவிகிதம் பேர் தமது குடும்பத்தினருடன் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சியளிப்பதற்காக, நாடு முழுவதும் தொழுநோய்ப் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இதுவரை ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்கும், 20,500 மருத்துவத்துறைப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நோய் ஒழிப்பில் மருத்துவர்கள், மருத்துவம் சாராக் கண்காணிப்பாளர்கள், சுகாதாரக் கல்வி போதனையாளர்கள், மருத்துவத்துறைப் பணியாளர்கள், உட்பட பல பயிற்சி பெற்ற ஊழியர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆய்வு செய்வதும், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். 25,000 பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் மருத்துவத்துறைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, வீடுவீடாகச் சென்று ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் நோயாளிகளின் குடும்பங்களும் நேரடியாக ஆய்வு செய்யப்படுகின்றன.

தொழுநோய் அபாயம் உள்ள மாவட்டங்களில் ஏறத்தாழ 4.3 கோடி மக்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் ஆயிரத்தில் ஐவருக்கு நோய் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. இந்த வகையில், தொழுநோயால் பாதிக்கப்படும் அபாயத்திற்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது என்று சொல்லலாம். உலகச் சுகாதார அமைப்பு, தேசிய ஆராய்ச்சி அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் தடுப்பூசி ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எது எப்படியிருந்தாலும், தொழுநோய் ஒரு மனிதப் பிரச்சினையாகத் தொடர்ந்துகொண்டே வருகிறது. சமூகத்திலிருந்து தள்ளிவைக்கப்பட்டு விடுவோம் என்ற உணர்வின் காரணமாக, பல நோயாளிகள் தமது நோயை வெளியே சொல்வதே இல்லை. நோய் கண்டுபிடிப்பிலும், சிகிச்சையிலும் இதனால் பல பிரச்சினைகள் எழுகின்றன. அரசு எவ்வளவு தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டாலும், சமூகத்தின் தவறான கண்ணோட்டம் காரணமாக, கட்டுப்பாட்டுத் திட்டங்கள் உரிய பலனைக் கொடுக்காமல் போகின்றன.

அடிப்படையில், எது தேவை என்றால், தொழுநோயாளிகளைப் பற்றிய சமுதாயத்தின் கண்ணோட்டம் பெருமளவில் மாற்றப்பட வேண்டும். இந்நோயை ஒழிக்கும் முயற்சிகள் வெற்றி அதை நம்பித்தான் இருக்கிறது.

**- பத்திரிகைத் தகவல் அலுவலகம்.**

# வெற்றிலையின் ரகசியம்!



**டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்**

நம் முன்னோர்கள் கால கால மாகவும் 'அனுபவ ரீதியாகவும்' பல மூலிகைகளின் சிறப்பை அறிந்து வந்துள்ளனர். மூலிகைகளைக் கொண்டு, நாமே செய்முறையில் தயாரித்து, நல்ல பயனையும் அடைந்து, நோயற்ற வாழ்வும் குறை வற்ற செல்வமும் அடைய அவர்கள் வழிவகுத்தனர்.

நோய் அகற்றும் மூலிகைகளில் சஞ்சீவி போல் திகழ்வது வெற்றிலை.

இந்தியாவில் வெப்பம் மிகுந்த பாகத்திலும், சதுப்புள்ள இடங் களிலும் வெற்றிலை வளர்க்கப் படுகிறது.

'கம்மாறு வெற்றிலை' கருமை யும், காரமும் மிகுந்தது. 'கருப்பூர வெற்றிலை' கற்பூர மணமும், சிறு காரமுமுடையது.

வெற்றிலையைத் தாம்பூலமாகப் போடும்போது, முக்கியமாக வெற் றிலையின் காம்பு, நுனி, நடு நரம்பு, பின்புறத்தில் அமைந்துள்ள தோல் இவற்றை நீக்கியே போடவேண்டும்.

பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு இவைகளை ஒன்றாக மெல்லும் போது, அதில் முதலில் ஊறிய முதல் நீர் நஞ்சு. இரண்டாவது நீர் மிகு பயித்தியம் தரும். மூன்றாவது நீர் அமிர்தம். நான்காவது நீர் அதி இனிப்பு. ஐந்தாவது நீர் பித்த தோஷம், அக்கினி மாந்தம், பாண்டு நோய் ஆகியவற்றை வரவழைக்கும்.

**தாம்பூலம் போடும் கால நியதிகள்**

காலையில் பாக்கை அதிகமாகச் சேர்க்கில், தாராளமாய் மலம் போகும், பகலில் சுண்ணாம்பு அதிகப்படுத்த நல்ல பசி எடுக்கும், மாலையில் வெற்றிலையை அதிகப் படுத்த வாயில் மணம் வீசும் என்று கால நியதிகளை நம் முன்னோர்கள் வகுத்தார்கள்.

**கம்மாறு வெற்றிலை:**

அ. கம்மாறு வெற்றிலையைத் தாம்பூலத்திற்குச் சதா உபயோகித்து வந்தால், கபம், கோழை ஆகிய இவை நீங்கும். சீதளம் பிரிக்கும். இவ்வெற்றிலையைப் பிட்டவியல் செய்து பிறகு சாறு பிழிந்து கஸ்தூரி, கோரோசனம் சேர்த்துக் குழந்தைகளுக்கு ஊற்றுவது உண்டு.

ஆ. இதை நெருப்பினால் வதக்கிக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் கஸ்தூரி, கோரோசனை முதலி யவை சம்பந்தப்பட்ட மாத்திரையில் சேர்த்துக் குழந்தைகள் அல்லது பெரியவர்களுக்குக் கொடுக்க, அது சீதளம் சம்பந்தமான நோயை விரை வில் குணப்படுத்தும்.

இந்த வெற்றிலையால் பல நன் மைகள் உண்டு. குரல் கம்மல், தொண்டையடைப்பு, நுரையீரல் நோய், இருமல், கடின சுவாசம், தலைபாரம், காது குத்தல், சீதளம், கோழைக்கட்டு, செரியாமை, வயிற்று வலி, தீப்பட்ட ரணம் ஆகியவை தீரும்;

**நோய் தீர்க்கும் முறையும் பயன்படுத்தும் முறையும்**

1. வெற்றிலையையும், சாம் பிராணிப் பதங்கத்தையும் மென்று சுவைக்கும்படி செய்தால், தொண் டையடைப்பு, குரல் கம்மல் இவை நீங்கும்.

2. பால் சுரக்கவும், பால் கட்டி உண்டாவதைக் குணப்படுத்தவும், மார்பக வீக்கத்தைக் கரைக்கவும், வெற்றிலையைத் தணலில் வாட்டி அடுக்காக வைத்துக் கட்டலாம்.

3. வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாற்றையும் சேர்த்து, நுரை யீரல் சம்பந்தமான நோய் நீங்கு வதற்கு அருந்தலாம்.

4. வெற்றிலையை நல்லெண் ணெய்யில் நனைத்து, விளக்கில் வாட்டி மார்பின் மேல் வைக்க இருமல், கடின சுவாசம், குழந்தை களுக்கு ஏற்படும் இருமல் ஆகியவை விலகும். அல்லது வெற்றிலைச் சாற் றுடன் சுண்ணாம்பு சேர்த்துத் தொண்டையில் தடவ குணம் ஆகும்.

5. வெற்றிலையைச் சாறெடுத் துக் காதில் 2-3 துளிகள் விட, தலைப்பாரம், காது குத்தல் ஆகி யவை குணம் உண்டாகும்.

6. தீப்பட்ட ரணம் மீது வெற்றி லையை வைத்துக் கட்ட, நாளடை வில் குணம் ஆகும்.

7. வெற்றிலைச் சாற்றில் கொஞ்சம் கோரோசனை சேர்த்துக் கொடுத்தால், கோழைக்கட்டு, இருமல், மூச்சுத் திணறல் ஆகியவை விலகும்.

8. வெற்றிலையுடன் 4 அல்லது 5 மிளகு சேர்த்துக் குடிநீரில் கொடுக்க, சிறுவர்களுக்குக் காணும் செரியாமை குணமாகும்.

9. பாடகர்களின் தொண்டை வளம் பெற, வெற்றிலையினுடைய வேரைச் சுவைத்து வரவேண்டும்.

10. தாம்பூலத்துடன் ஏலம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, சாய்ச்சுக்கட்டி ஆகியவற்றைத் தகுந்தபடி கலந்து சாப்பிட மலம் சுத்தி ஆகும். கிருமி, கபம், தாகம், பல்நோய் ஆகியவை நீங்கும். மற்றும், தாம்பத்திய உற வில் நீட்டிப்பும், தாது விருத்தியும் ஏற்படும்.

**தாம்பூலம் போடக் கூடாதவர்கள்**

ரத்தகாசம், ரத்தப்பித்தம், வறண்ட கண்கள், கண் வீக்கம் உள்ளவர்கள், க்ஷயம், தலை நோய், ஜன்னி வாதம், மூர்ச்சை மற்றும் வெறி உள்ளவர்கள் இவற்றால் துன்பப்படுவோர் தாம்பூலம் போடா மல் இருப்பது நல்லது.

வெற்றிலை அரியதொரு மருந் துவப் பொருளாகத் திகழ்வதை அனுபவரீதியாக நாம் அறிந்து கொள்ளலாம். ●

# கோழி முட்டையின் பிற பயன்கள்



டாக்டர் ந. இராமமூர்த்தி,
டாக்டர் பா. மோகன்,
டாக்டர் தே. தியாகராஜன்
டாக்டர் ச. நாகராசன்,
டாக்டர் பி. ரெங்கா ரெட்டி
கோழியின அறிவியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்-2.

**கோ**ழி முட்டையானது முட்டையிலுள்ள கரு வளர்வதற்குத் தேவையான உணவாகவும் மக்களின் அன்றாட உணவுத் தேவைக்காகவும் மிகுந்த அளவில் பயனாகிறது. ஆனால், இதே முட்டையின் பிற பயன்கள் எண்ணிக்கை யிலடங்கா. அத்தகைய பயன்கள் யாவை எனில்-

1. வீட்டு வளர்ப்புப் பிராணிகளுக்கு உணவு தயாரிக்க.
2. அன்றாடம் மக்கள் உபயோகிக்கும் ஷாம்பு போன்ற ஆடம்பரப் பொருட்கள் தயாரிக்க.
3. கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான மருந்து தயாரிக்க.
4. சோதனைச்சாலைகளில் நுண்ணுயிர் மற்றும் நச்சுயிர்களை வளர்க்க.
5. செயற்கைக் கருவூட்டல் முறையில் விந்துவைப் பதப்படுத்த.

- இப்படிப் பல வழிகளில் அது பயன்படுகிறது.

**வீட்டு வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவு தயாரிப்பதில் கோழி முட்டையின் பங்கு:**

வீட்டு வளர்ப்புப் பிராணிகளான நாய் மற்றும் பூனைகளின் உணவில் முட்டை மிகுந்த அளவில் பயன்படுத்தப் படுகிறது. இளம் பிராணிகளுக்குக் கோழி முட்டையைச் சிறப்பு உணவாகக் கொடுக்கலாம். கோழித் தீவனத்தில் சுண்ணாம்புச் சத்திற்காக, நத்தை ஓடு, சுண்ணாம்புக்கல் இவற்றைக் கலப்பதற்குப் பதிலாக அரைத்த முட்டை ஓட்டை உபயோகித்தால் சிறந்த பயன் கிடைக்கும்.

இவ்வாறு பயன்படுத்துவதற்கு முன் முட்டையின் ஓடு தூய்மையானதாகவும், நோய்க் கிருமிகள் அற்றதாகவும், நன்கு பதப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு பதப்படுத்திய பின்னரும் கால்சியம் சத்து உள்ள பிற பொருட்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துச் சரியான அளவில் இருந்தால்தான் சேர்த்துக் கொள்ளவேண்டும். கோழி முட்டையைப் பன்றித் தீவனத்தில் கலந்து பரிசோதனை செய்து பார்த்ததில், கோழி முட்டை வெகு எளிதில் செரிமானம் ஆவதாகக் கண்டறிந்துள்ளனர்.

**பரிசோதனைச் சாலையில் கோழி முட்டையின் பங்கு**

கோழி முட்டை சிறந்த புரதச் சத்து நிரம்பிய முழுமையான உணவுப் பொருளாகும். அமினோ அமிலங்கள் சரியான விகிதத்தில் நிறைந்தது. உயிரியல் மதிப்பு (Biological Value) அதிகமுள்ளதும் ஆகும். முட்டையின் வெண்கரு மற்ற உணவுப் பொருட்களில் உள்ள புரதச் சத்துக்களின் அளவை அளக்க ஒப்பிடுவதற்கு அளவுகோலாகப் பயன்படுகிறது.

முட்டையின் மஞ்சள் கரு பரிசோதனைச் சாலையில் மிக நுண்ணிய நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாகிறது. ஒருசில நுண்ணுயிர்களைச் சாதாரண நுண்ணுயிர் வளர்க்கும் உணவுச் சத்தில் வளர்த்தால் வளராமல் போக வாய்ப்புண்டு. ஆனால், அதே உணவுச் சத்தில் முட்டையின் மஞ்சள் கருவைச் சிறிதளவு சேர்த்தால் நன்கு வளர்வதைக் காணலாம். 'கிளாஸ்ட்ரிடியம் பெர் பிஞ்சன்ஸ்' போன்ற நுண் கிருமிகளால் உற்பத்தியாகும் நச்சுப் பொருளை உணவுப் பொருளில் இருந்து கண்டுபிடிக்க முட்டை மஞ்சள் கரு மிகவும் அத்தியாவசியமாகிறது. முட்டையின் சில உபபொருட்கள் பரிசோதனைச் சாலையில் நுண்ணுயிர்களை வளர்க்கப் பயன்படுகின்றன.

**உயிரியல் ஆராய்ச்சியில் முட்டையின் பங்கு**

1. முட்டையின் வெண்கரு கரையும் தன்மையுடையது ; நீர்த்தன்மை அகற்றி



**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு. எஸ்.நயினார்சுந்தரம் அவர்கள் 30.11.91 அன்று சந்தித்தார்.**

யது. முழு முட்டை கரையும் தன்மை யுடையது - நுண்ணுயிர் அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு நுண்ணுயிர் களின் வளர் சிதை மாற்றத்தைச் சோதிக்க உதவுகிறது.

2. முட்டை வெண்கரு (உறைந்த நிலை); முட்டை மஞ்சள் கரு (உறைந்த நிலை) முழு முட்டை (உறைந்த நிலை) - இதனை மற்ற நுண்ணுயிர் உணவுடன் சேர்த்து காற்று அற்ற நிலையில் வளரும் நுண்ணு யிர்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத் தலாம்.

3. முட்டை, இறைச்சி மூலம் (Media) - காற்றற்ற நிலையில் வளரும் நுண்ணு யிர்கள் புரதச் சத்தைச் செரிக்கச் செய்யும்.

4. கிளிசரால் கலந்த முட்டை மூலம் மாட்டு இறைச்சி - காசநோய் ஆராய்ச் சிக்கு.

5. டெல்லூரைட் - பாலி மிக்சின் முட்டை மஞ்சள் கரு - ஸ்டாஃபைலோ காக்கஸ் சோதனைக்கு.

**மருந்து மற்றும் மருத்துவப் பணியில் முட்டையின் பங்கு**

உயிர்க்கருவுள்ள குஞ்சு பொரிக்கும் முட்டை தடுப்பூசி தயாரிப்பதற்குப் பெரிதும் உபயோகமாகிறது. டாக்டர், குட் பாஸ்ட்சர் முதன் முதலாகக் கோழிக் குஞ்சுவின் கருவில் நச்சுயிரிகளை (Virus) வளர்த்து, தடுப்பூசி தயாரிக்க வழி செய்ய லாம் என்ற பேருண்மையைக் கண்டு பிடித்தார். அதன்பிறகு மற்ற விஞ் ஞானிகள் கோழி முட்டையைப் பயன் படுத்தி தடுப்பூசி தயாரிப்பதில் பெரு வெற்றியடைந்துள்ளனர்.

1937-ஆம் ஆண்டு மேலை நாட்டில் தூக்கநோயினால் 1,70,000 குதிரைகள் இறந்து போயின. கிளார்க் (1940) என்னும் விஞ்ஞானி இந்நோய்க்கான தடுப்பு மருந்தினைக் கோழி முட்டையின் கருவைப் பயன்படுத்தித் தயாரித்துத் தடுத்து நிறுத்தினார். காக்ஸ் (1952) கண்டுபிடிப்பின் மூலம் விலங்குகளைத் தாக்கும் நோய்க்கிருமிகள் குறித்த ஆராய்ச்சி நன்கு வளர்ச்சியுற்றது. ரிக்கெட்சியா, நச்சுயிர்கள் போன்ற நோய்க் கிருமிகளை கோழி முட்டைக் கருவில் வளர்த்து கால்நடைகளுக்குத் தடுப்பூசிகளைத் தயாரித்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

கோழி முட்டைக் கருவில் நச்சுயிரி மற்றும் நுண்ணுயிர்களை வளர்த்துக் கீழ்க்கண்ட நோய்களுக்குத் தடுப்பூசி தயாரித்து வருகின்றனர்.

1. குதிரை இன நோய்
2. நாய் இன டிஸ்டெம்பர் நோய்
3. கோழி டைபாய்டு
4. கோழி அம்மை
5. பசு அம்மை
6. கியூ சுரம் ('Q' Fever)
7. கோழி ஜலதோஷம்
8. இராணிக்கெட் நோய்
9. லேரிங்கோ டிரக்கியைடிஸ்
10. வெறி நாய்க்கடி நோய்
11. புறா அம்மை
12. மஞ்சள் சுரம்
13. செம்மறியாட்டு நீல நாக்கு நோய்

**செயற்கைக் கருவூட்டலில் கோழி முட்டையின் பங்கு:**

நமது நாட்டில் வெண்மைப் புரட்சி மலர்ந்து வெற்றி பெறச் செயற்கை முறைக் கருவூட்டல் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. அத்தகைய செயற் கைக் கருவூட்டலில் பொலி காளைகளின் விந்துவைப் பதப்படுத்துவதற்குக் கோழி முட்டையின் மஞ்சட்கரு அத்தியாவசிய மாகத் தேவைப்படுகிறது. இதில் ஆண் அணுவினுடைய உணவிற்கும், கருவூட்டல் திறன் அதிகப்படுத்துவதற்கும் முட்டை யின் மஞ்சள் கரு தேவைப்படுகிறது.

**நிலத்திற்குப் பயன்படும் உரமாக முட்டையின் பயன்கள்:**

மிக நீண்ட காலமாகக், குஞ்சு பொரிப்பு நிலையங்களில் இருந்தும், கோழி பதப்படுத்தும் நிலையங்களில் இருந்தும் எண்ணிலடங்கா முட்டைகள் மற்றும் ஓடுகள் பயன்படுத்தப்படாமல் ஒதுக்கித் தள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், இத்தகைய முட்டைகள் மற்றும் ஓடுகளை உலரவைத்து, நோய்க்கிருமி களை அழித்து விலங்குகளுக்கு உணவா கவோ, நிலத்திற்கு உரமாகவோ பயன் படுத்தி பொருளாதாரத்தை உயர்த்த புதி தாக ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளனர்.

முட்டையிலுள்ள வெண்கரு மண் ணிற்கு அம்மோனியா சத்தை அளிக் கிறது. வியாபார ரீதியில் இத்தகைய முட்டைகளின் ஓடுகளையும் பயன்படுத்தி உரம் தயாரித்து காய்கறித் தோட்டத்தில் மக்கிய சத்தாகப் பயன்படுத்தி பொருளா தாரத்தில் முன்னேறலாம்.

## பள்ளி மாணவர்களுக்குப் பாவேந்தர்

**ஆசிரியர்: நீலவன்**

**வெளியீடு:** அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

விலை: ரூ.13 பக்கம்: 117

**பா**வேந்தர் பாரதிதாசன் அவர்கள், நாளைய தலைமுறைகள் நலம்பெற நல்ல நல்ல பாடல்களையும் தந்துள்ளார். 'இளைஞர் இலக்கியம்' அதற்குத் தக்க சான்று.

'நூலைப்படி-சங்கத்தமிழ் நூலைப்படி' என்று குழந்தைகளுக்காகப் பாடிய பாடல்கள் ஏராளம். அந்தப் பாடல்களை, குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே, உரையாடல் வடிவில் கூறுகிறார் ஆசிரியர். பாவேந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. பள்ளி மாணவர் படித்துப் பயன் பெறலாம்.

## திருமலை-திருப்பதி சுற்றுலாத் தலங்கள்

**ஆசிரியர்: அ. ராம்கோபால்**

**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-98.

பக்கம்: 56 விலை: ரூ. 8/-

**தி**ருமலை-திருப்பதி இந்தியத் திருநாட்டின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்கள் மட்டுமல்ல, தெய்வமணம் கமழும் திருக்கோயில் உள்ள புனிதத் தலமும் ஆகும்.

இந்த நூலில், இத்தலங்கள் குறித்த பொது விவரங்கள், போக்குவரத்து வசதிக்ள் குறித்த விவரங்கள் முதலான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

சுற்றுலாப் பயணிகளுக்கும், பக்தர்களுக்கும் பயன்படும் நூல்.

—பி.வி.ஜி.

## தமிழ் மருந்துகள்

**ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்**

**வெளியீடு:**
குமரன் பதிப்பகம்,
2, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-17

பக்கம்: 80 விலை: ரூ. 9/-

**ப**ல்வேறு நோய்களுக்கான சிகிச்சை முறையும், அவற்றுக்கான மருந்துகளும் இந்நூலில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. அதாவது 34 வகையான நோய்களுக்கு இந்நூலில் மருந்துகள் உள்ளன.

நோயைக் கட்டுப்படுத்த அல்லது குறைக்க அல்லது வராமலேயே இருக்க உணவுக் கட்டுப்பாடு மிகமிக இன்றியமையாதது என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர். பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

# நூல் நயம்

## விண்வெளியில் விஞ்ஞான விந்தைகள்

**ஆசிரியர்: டாக்டர் எஸ்.எஸ். மணியம்**

**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94

பக்கம்: 112 விலை: ரூ. 12.50/-

**வி**ண்வெளியில் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்கின்றன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் அவை பற்றிய தகவல்கள் மனித குலத்துக்கு வந்த வண்ணம் இருக்கின்றன.

விண்வெளி, வாயுமண்டலம், மேகமும் மழையும், தாரகைகள், கிரகங்கள் முதலானவை பற்றிய தகவல்களும், அணுசக்தி, செயற்கைக் கோள், ராக்கெட் இவை பற்றிய செய்திகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவையன்றி, சந்திரமண்டலத்திற்குச் சென்ற அனுபவங்கள் குறித்த நிறைவான செய்திகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

—பொ. மறைமலை

### உண்மையான அறிவு

**உண்மையான அறிவு என்றால் என்ன? எது நேர்மையான பாதையைக் காட்டுகின்றதோ, அதுவே உண்மையான அறிவு.**

—ஜேம்ஸ் ஆலன்.

## மாணவர் கல்விக்கு மனவியலின் உதவி

**ஆசிரியர்: திருமதி ஜாய்டேவிட் சித்தையா**

**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம், மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்: 400 விலை: ரூ. 42/-

**இ**ன்றைய இளம் தலைமுறையினரின் அறிவாற்றலுக்கு வேகமும் அதிகம், கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தாகமும் அதிகம். கண்டிப்பும், கட்டாயமும் இருந்தால் கட்டறுத்துக் கொண்டு ஓடத் துடிக்கும் இளம் உள்ளங்களை நெறிப் படுத்தி, நிலைநிறுத்தி நல்ல செய்திகளை அவர்தம் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிக்கும் வழிகாட்டும் நூல். ஆசிரியர், பெற்றோர் இரு பாலருக்குமே உபயோகப்படும்.

## திருக்குறள் அறிவுரைகள்

**ஆசிரியர்: முல்லை பி.எல். முத்தையா**

**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்
சென்னை-600 098.

பக்கம்: 216 விலை: ரூ. 22/-

**த**மிழுக்குத் தனிச் சிறப்பு தந்து தலைமுறைக்கும் வழிகாட்டியாகத் திகழ வல்லது திருக்குறள். திருக்குறளுக்குப் பழைய உரைகளன்றி, புத்துரை, விளக்க உரை, மரபுரை எனப் பல உரைகள் உண்டு. முல்லை முத்தையா அவர்கள் இந்நூலின் வழியே அறத்துப்பால், பொருட்பால் என்ற இரு பால்களுக்கும் நேருரை வழங்கியுள்ளார். பள்ளிச் சிறுவர்களுக்குப் பயன்தரவல்ல நூல்.

—சுகுமாரன்

## சிறுவர் செந்தேன்

**ஆசிரியர்: புலவர் வே. பிரபாகரன்**

**வெளியிட்டோர்:**
அழகம்மை பதிப்பகம்
R-56/11, கோட்டூர்புரம்
சென்னை-600 085

பக்கம்: 88 விலை: ரூ. 10

**சி**றுவர்களுக்கான அறிவுரைகள், விளக்கங்கள் ஆகியவைகளைக் கொண்ட கவிதைத் தொகுப்பு.

இனிய சந்தத்தோடு, எளிய நடையோடு 'அளவாய் நடந்தால்', 'மும் மூன்று' போன்ற சற்று வித்தியாசமான சிந்தனைகளும் இக்கவிதைத் தொகுப்பில் உண்டு.

- என்.கே. சாமி

# வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

## உரங்கள்




VIJAY

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

தேசிய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343

**மாணவர் பக்கம்:**



# சாரண இயக்கத்தின் கதை!

**சா**ரண, சாரணிய இயக்கத்தின் தந்தை பேடன் பவல் 1857-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் இலண்டனில் பிறந்தார்.

1876-ஆம் ஆண்டு இராணுவத் தேர்வில் குதிரைப் படையில் சப்- லெப்டினன்ட் ஆக நியமனம் செய்யப்பட்டு, இந்தியாவிற்கு வந்தார். இந்தியாவில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார். ஐந்து ஆண்டுகள் முடிந்ததும் பேடன் பவல் இராணுவப் படை இங்கிலாந்து திரும்பியது. நெட்டால் என்னும் இடத்தில் மலைப் பாதையை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். சூலுப் போர் நடைபெற்றபோது சூலுத் தலைவர்களைப் பிடித்து, அடக்கும் வேலையில் அமர்த்தப்பட்டார். அதன் பின்னர் சில நாட்கள் மத்தியத் தரைக்கடலில் உள்ள மால்டா தீவில் எதிரிகளைப் பற்றி ஒற்றறியும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். அதற்குப் பின்னர் அஷான்டி (Ashanti) என்ற இடத்தில் பாலங்கள் அமைக்கும் ஆக்கல் கலையில் (Pioneering) ஈடுபடுத்தப்பட்டார். இங்குதான் மக்கள் இடது கையைப் பிடித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளும் பழக்கத்தைக் கண்டு, அதைச் சாரண இயக்கத்தில் புகுத்தினார்.

1896-ஆம் ஆண்டு மட்டபலிலாண்டு என்ற இடத்தில் ஒற்றறிதல் வேலையில் ஈடுபட்டபொழுது, தூடு என்ற மானின் கொம்பு கிடைத்தது. அக்கொம்பைக் கொண்டு, ஊதி, அழைப்பு ஒலி ஏற்படுத்தினார். 1897-இல் கர்னல் பதவி பெற்று இந்தியாவிற்கு மீண்டும் வந்தார். 1899-இல் போயர் யுத்தத்தில் 217 நாள்கள் முற்றுகையிட்டு வெற்றியடைந்தார்.

நம் நாட்டுச் சிறுவர்களை நல்வழிப்படுத்த 1907-ஆம் ஆண்டு பிரௌன்சித் தீவில் 20 சிறுவர்களைக் கொண்டு ஒரு பாடி வாழ்க்கையை ஒரு வாரம் நடத்தினார். 1908-ஆம் ஆண்டு சிறுவர் சாரணியம் (Scouting for Boys) என்ற நூலை வெளியிட்டார்.

நம் நாட்டில் 1909-ஆம் ஆண்ட சாரண இயக்கம் தொடங்கப்பட்டது.

இவ்வியக்கத்தில் ஆங்கிலேய-ஆங்கிலோ இந்தியச் சிறுவர்களுக்கு மட்டும் பயிற்சியளிக்கப்பட்டது. 1916-ஆம் ஆண்டு டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் இந்திய மாணவர் சாரணச் சங்கத்தைச் சென்னையில் தொடங்கினார். இச்சங்கம் அகில இந்திய மாணவர் சாரணச் சங்கத்தோடு இணைந்து செயற்பட்டது. அதன் பின்னர் 1938-ஆம் ஆண்டு, இந்துஸ்தான் சாரணச் சங்கம் என்று தனியாகத் தோன்றியது.

1950-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 7-ஆம் நாள் அகில இந்திய மாணவர் சங்கமும் இணைந்து, தற்போதுள்ள பாரத சாரண, சாரணியச் சங்கம் தோன்றியது. 1951-ஆம் ஆண்டு வரை தனித்தியங்கி வந்த இந்திய மாணவியர் வழிகாட்டிச் சங்கமும் இணைந்து பாரத சாரண, சாரணியச் சங்கமாகச் செயல்பட்டு வருகிறது.

**- நன்றி:**
**டாக்டர் கோ. பெரியண்ணன்**
**எழுதிய 'சிறுவர் சாரண இயக்கம் வளர்ந்த கதை'**

# கல்விச் செல்வம்

**—கவிஞர் பா. திருநாவுக்கரசு**





பள்ளி செல்லும் பிள்ளைகளே
பாடம் நன்றாய்க் கற்றிடுங்கள்
கல்விச் செல்வம் ஒன்றேதான்
காலம் முழுதும் உதவி செய்யும்!

மற்ற செல்வம் வற்றிடினும்
மாறாச் செல்வம் கல்வியன்றோ
உற்ற துணையாய் இறுதிவரை
உன்னைக் காப்பது கல்வியன்றோ!

உயர்ந்த கல்வி உனக்கிருந்தால்
உலகம் முழுதும் உனக்கடிமை!
உண்மைக் கல்வி உதவியுடன்
விலகும் அடிமை இருள்மடமை!

கற்றவர்க் கென்றும் மதிப்பிருக்கும்
கல்லார்க் கென்றும் இழிவிருக்கும்
பெற்றவர் மகிழக் கற்றிடுவாய்
பெரியோர் வழியில் சென்றிடுவாய்!







# மரம் வளர்ப்போம் !



மரத்தை வளர்க்க வாருங்கள்-அதன்
மகிமை கேட்டு மகிழுங்கள்
தரணி காத்து நின்றிடும்-நம்மைத்
தாயைப் போலக் காத்திடும்!

அழகு வண்ண மலர்களும்-சுவை
அளிக்கும் காயும் கனிகளும்
வழங்கி மக்கள் வாழவே-உலகில்
வள்ளல் போல வாழ்ந்திடும்!

காற்றில் உள்ள நச்சினை-மரம்
களைந்து நம்மைக் காத்திடும்
சுற்றுப் புறத்தைப் பேணிடும்-என்றும்
சுகத்தைக் கொடுக்கும் மருத்துவர்!

பறவைக்கூட்டம் வாழவே-பாரில்
பசுமை காட்டி அழைத்திடும்
உறவை நினைக்க நிழலினை நமக்கு
உதவி நிற்கும் தோழனாம்!

அன்பு கொண்டு உலகினில்-மரங்கள்
அழகு செய்யும் ஓவியம்
கண்கள் பார்த்து மகிழவே-பரில்
காட்சி தரும் செல்வமாம்!

காட்டில் உள்ள மரங்களை-நெஞ்சில்
கருணை இன்றி நாமுமே
வெட்டி வீழ்த்தல் ஆகுமோ-இந்தக்
கெட்ட செயலும் நீங்குமோ?

மனிதர் வாழ உலகினில்-என்றும்
மழையைக் கொடுத்து உதவிடும்
புனிதம் மிக்க மரங்களை-நாமும்
போற்றி என்றும் வளர்ப்போமே!





புலவர் க. அண்ணாமலை





# இலக்கிய விருந்து: ஞானம்

இன்பத்தில் இன்புறாமலும் துன்பத்தில் துன்புறாமலும் இருக்கும் மனநிலையினை ஞானம் எனக் குறிப்பிடலாம். இம் மனநிலையினைப் பெற்றவர்கள் ஞானிகள். ஞானிகளைத் தமிழ் இலக்கியங்கள் அறிவர் என்றும் சித்தர் என்றும் குறிப்பிடுகின்றன. ஒருவர் ஞானம் பெறுவதற்குத் தடையாய் இருப்பது அறியாமை. அறியாமைக்குக் காரணம் அவரின் இயலாமையும் முயலாமையுமே ஆகும்.

நமக்காக வேறொருவர் முயற்சி செய்து ஞானத்தைப் பெற்றுத் தந்துவட முடியாது. பகவான புத்தா குறிப்பிட்டதைப் போல் ஒவ்வொருவரும் தங்களுடைய ஞான விளக்கைத் தாங்களேதான் ஏற்றிக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றும்பொழுது காற்றடித்தாலும், கடும்புயல் வீசினாலும், பெருமழை பொழிந்தாலும் அவர்களேதான் தடுத்துக்கொள்ள வேண்டும். ஞானம் என்பது ஒரு மனநிலை அதாவது ஒரு பக்குவப் பட்ட உணர்வு. அதை அவரவர் சொந்த முயற்சியின் வழியேதான் பெற முடியும்.

பூதத்தாழ்வார் தம் ஞான விளக்கை எப்படி ஏற்றுகிறார தெரியுமா! அவர் ஏற்றும் விளககிற குத் தகளி அதாவது அகல் எது தெரியுமா! அன்பே அந்த விளக்கின் தகளியாம்; ஆர்வமே அதற்கு இடும் நெய்யாம்; பக்தியால் உருகும் அவரின் மனமே அந்த விளக்கிற்கு உரிய திரியாம். இவ்வாறு எம் பெருமான் நாராயணனுக்கு ஞானத் தமிழை விரும்பிப் பாடிய பூதத் தாழ்வார் நன்றாக மனமுருகி ஞான விளக்கு ஏற்றியதை,

''அன்பே தகளியா
ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை
இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு
ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்''

என்கிறார். பல்லாண்டுகள் உடலை வருத்திக் கடுந்தவம் புரிந்து இறைவனைக் காண முயற்சிப்பதைக் காட்டிலும் உள்ளன்போடு மனமுருகி வழிபட்டால் இறைவனைக் காணலாம் என்பதே ஆழ்வார்களின் கருத்தாகும். ''அழுதால் உன்னைப் பெறலாம்'' என்கிறார் மாணிக்க வாசகர்.

ஒருவருக்காக மற்றொருவர் உணவு உண்ண முடியுமா! இன்பத்தையும் துன்பத்தையும் அவரவர்களே அனுபவிக்க வேண்டும். ஞானமும் அப்படித்தான். இக்கருத்தைப் புலவர் கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் குறிப்பிடுகிறார்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ
ரன்ன''

இந்த உண்மையை உணர்ந்தால்,

''பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும்
இலமே''

என்ற ஞானநிலை வந்து அமைந்து விடும். இந்நிலையினைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் தாங்களே முயல வேண்டும். இக் கருத்தினை நாலடியார்

''நன்னிலைக்கண் தன்னை
நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும்
நிலையினும்
மேன்மேல் உயர்ந்து
நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்''

எனக் குறிப்பிடுவதை நாம் ஒவ்வொருவரும் மிக ஆழமாக நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

ஞானநிலை பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் முழு முயற்சியோடு ஒருவர் முயலுவாரேயானால் நிச்சயம் அவர் ஞானத்தைப் பெற


**டாக்டர் அரங்க.இராமலிங்கம்**
தமிழ் விரிவுரையாளர்
அஞ்சல்வழிக்கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600 005.




# குழந்தைகள் அருங்காட்சியகம்

'தொட்டுப் பாருங்கள்!' அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலுள்ள 'குழந்தைகள் அருங்காட்சியகம்' குழந்தைகளுக்கு விடுக்கும் அழைப்பு இதுதான். காட்சிப் பொருட்களைத் தொட்டு அனுபவிப்பதன் மூலமே குழந்தைகள் அவற்றைப் பற்றிய உண்மையை அறிய முடியும் என்பதுதான் இந்த அருங்காட்சியகத்தின் சித்தாந்தம். 'தொடாதீர்கள்' என்னும் அறிவிப்பு இங்கே இல்லை!

'ஓடாதீர்கள்', நடந்து செல்லுங்கள்' என்பது இந்த அருங்காட்சியகத்தில் காணப்படும் அறிவிப்புப் பலகைகளில் ஒன்றாகும். 'படித்தால் மறந்து போகிறது பார்த்தால் நினைவில் நிற்கிறது. செய்து பார்த்தால் நன்றாகப் புரிகிறது' என்று சீனப் பழமொழி ஒன்று கூறுகிறது. இந்தப் பழமொழியின் வாசகமும் இங்கே எழுதி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்துக்கு வருகின்ற குழந்தைகள் இங்கே வைக்கப்பட்டுள்ள காட்சிப் பொருட்களைத் தொட்டுப் பார்க்கும்படியும், பரிசோதனைகளைச் செய்து பார்க்கும்படியும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இங்கு வரும் குழந்தைகள் இங்குள்ள கம்ப்யூட்டர் களை இயக்கிப் பார்க்கலாம்; என்னென்ன வாங்கினோம் என்று அதில் கணக்கு போட்டுப் பார்க்கலாம். இங்குள்ள இயந்திரத்தின் துணையுடன் தங்கள் பார்வையைப் பரிசோதித்துக் கொள்ளலாம். இங்கு வைக்கப்பட்டுள்ள பழங்கால இறகுப் பேனாவால் எழுதிப் பார்க்கலாம். ஆப்பிரிக்க நாட்டு முரசை முழக்கிப் பார்க்கலாம். இங்கே கட்டி வைக்கப்பட்டுள்ள செம்மறியாட்டைத் தடவிக் கொடுக்கலாம்; மெக்சிகோவின் சூடான சாக்லெட் பானத்தைப் பருகலாம்.

இந்த அருங்காட்சியகத்திற்குள் நுழைவதற்கு முன்பாக, ஒரு விந்தையான பூங்காவை இங்கு வரும் குழந்தைகள் கடந்து வரவேண்டி இருக்கும்.

பெயர்தான் பூங்காவே தவிர இங்கே செடி கொடிகள் இல்லை; பூ இல்லை; காய் இல்லை; கனி இல்லை. கந்தைத் துணிகள், கண்ணாடித் துண்டுகள் மற்றும் இதர துண்டுப் பொருட்களைக் கொண்டு உருவானதுதான் இந்த விந்தைப் பூங்கா. இதனை உருவாக்கியவர் யார் தெரியுமா? இந்தியாவைச் சேர்ந்த பிரபல கட்டடக் கலை நிபுணர் ஆவார். இந்தியாவில் அவர் உருவாக்கியுள்ள விந்தைப் பூங்காவைப் போலவே இங்கும் சிறிய அளவில் அவர் அமைத்துக் கொடுத்தார். பொம்மைகள் நிறைந்தது இந்தப் பூங்கா. இளம் உள்ளங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துபவை இவை.

பழைய அலுமினிய டப்பாக்களை அழித்து அவற்றை அலுமினியத் தகடுகளாக மாற்றி, மீண்டும் புதிய டப்பாக்கள் செய்வது எப்படி என்று குழந்தைகளுக்கு விவரிக்க 'அல்கோ ரிசைக்ளிங் கம்பெனி' என்னும் நிறுவனம் இந்த அருங்காட்சியகத்தில் ஒரு காட்சிக் கூடத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது. ஓர் அலுமினிய டப்பா எத்தகைய மாற்றங்களைப் பெறுகிறது என்பதை அறிய, இங்கு வரும் குழந்தைகளையே அலுமினிய டப்பாவாக நடிக்க வைக்கிறார்கள்.

'அடுத்த ஐந்து நிமிடங்களுக்கு நீ உன்னை ஓர் அலுமினிய டப்பாவாக நினைத்துக் கொள்ள வேண்டும்' என்று இங்கு வந்த 4 வயதுப் பையன் ஒருவனிடம் கூறினார் இங்குள்ள கண்காணிப்பாளர். அதன்பின், அந்த அலுமினிய டப்பா - அதாவது அந்தச் சிறுவன் - ஒரு திரையைக் கடந்து செல்ல வேண்டி இருந்தது. அது நசுக்கப்படுகிறது என்பதைப் புரிய வைப்பதற்காக ஒரு குறுகிய துளைக்குள் புகுந்து செல்ல நேர்ந்தது. பின்பு அந்த டப்பா உருக்கப்பட்டு, தகடாக்கப்படும் அனுபவத்தையும் அந்தச் சிறுவன் அறிந்து கொண்டான். இறுதியில், மெல்லிய அலுமினிய உடை ஒன்றை அவனுக்கு அணிவித்தார் அந்தக் கண்காணிப்பாளர். இப்போது அந்தச் சிறுவன் புதிய அலமினிய டப்பா ஆகிவிட்டானாம்.

குழந்தைகளை மகிழ்விக்கும் இந்த அதிசயக் காட்சிக் கூடத்தை உருவாக்கியவர் ஆன் டபிள்யூ. லெனின் என்னும் பெண்மணி ஆவார். ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான குழந்தைகள் இந்த அருங்காட்சியகத்தைப் பார்த்து மகிழ்கின்றனர்.

- அமெரிக்கத் தகவல் அலுவலகம்.

---

முடியும்.

''சேவடி படரும் செம்மல்
உள்ளமொடு
நலம்புரி கொள்கைப்
புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை
ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து
இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ
முன்னிய வினையே''

என்கிறார் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர். இறைவனுடைய திருவடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற உண்மையான உள்ளத்துடனும் உறுதியினுடனும் ஒருவர் முயலுவாரேயானால் அவர் ஞானத்தை நிச்சயம் பெறமுடியும் என உறுதிபடக் கூறுகிறார் நக்கீரர்.

இறைவனின் திருவடிகளை ஞானம் பொதிந்திருக்கின்ற இடமாகச் சான்றோர் குறிப்பிடுவர். இறைவனின் திருவடிகளைப் பற்றுதல் என்றால் ஞானத்தைப் பெறுதல் என்று பொருள். அதனால்தான் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து எனும் முதல் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களில் ஏழு குறட்பாக்களில் இறைவனின் திருவடிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியாகவும்; பேரறிவாளனாகவும்; வாலறிவனாகவும் விளங்குகின்ற இறைவனின் திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொள்ள வேண்டும். அவ்வாறு கொண்டால் ஞானப் பேரொளியாகிய இறைவன் பற்றுகின்றவர் உள்ளத்தில் ஞான ஒளியாக தானே வந்து அமர்வான். உள்ளத்தில் உண்மையான ஞான ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும். இவ்வாறு நமது உள்ளத்தில் ஒளிரும் ஞானஒளி மிகச் சிறியதாக இருந்தாலும் அது கணக்கற்ற பிறவிகளுக்குக் காரணமாக அமையும் அறியாமை அனைத்தையும் அழித்துவிடும். மிகச்சிறிய நெருப்புப் பொறி மிகப்பெரிய காட்டினையும் எரித்து அழித்துவிடுவதைப்போல ஞானஒளி அறியாமை இருளை அகற்றிவிடும் என்பதை,

''அக்கினிக் குஞ்சொன்று
கண்டேன்-அதை
அங்கொரு காட்டிலோர்
பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு- தழல்
வீரத்தில் குஞ்சென்றும்
மூப்பென்று முண்டோ?''
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

என உருவக நெறியில் பாரதியார் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கையில் நிகழும் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமாக அமையும் அறியாமையை அகற்றுவோம். பேரின்ப நிலையாகிய ஞானநிலையைப் பெற முயலுவோம். அப்பொழுதுதான் யான் எனது என்னும் செருக்கு அற்று, வானோர்க்கு உயர்ந்த உலகமாகிய பேரின்ப நிலையினை எய்த முடியும்.

மருத்துவக் கட்டுரை:

# இரத்தக் கொதிப்பு



ஒரு நோயாளியைப் பரிசோதிக்கிற மருத்துவர், 'உங்களுக்கு அதிக இரத்த அழுத்தம் (Blood Pressure) இருக்கிறது' என்றோ - 'இரத்தப் பேரழுத்தம் (Hyper Tension) இருக்கிறது' என்றோ சொல்லிவிட்டால் போதும்; அந்த நோயாளி தன்னுடைய சாவுக்கே நாள் குறிக்கப்பட்டு விட்டது போலச் சகலமும் ஒடுங்கிப் போவார்.

இரத்த அழுத்தம் என்றாலே பொதுவாக உயர் இரத்த அழுத்தம் தான் (High Blood Pressure) எல்லோருக்கும் நினைவு வரும்.

உயிருக்கு ஆபத்தான சில நோய்களுக்கு, இந்த வகை இரத்த அழுத்தமே அடிப்படைக் காரணமாக இருப்பதால் - இது ஒரு அஞ்சத்தக்க விஷயம்தான்.

ஆகவே, இதைப்பற்றிச் சற்று விரிவாக அறிந்து கொள்ளும் ஆர்வம் எல்லோருக்கும் இருக்கத் தானே செய்யும்?

மிகச் சாதாரணமானவர்களும் இரத்த அழுத்தம் பற்றிய வினாக்களுக்கு விடையறிந்து தெளிவடைய விரும்பவே செய்வர் என்ற எண்ணத்தோடு - டாக்டர் சி. இராமகிருஷ்ணன், எம்.டி., அவர்களுடன் நாம் கலந்துரையாடினோம். எல்லோருக்கும் விளங்கவைக்கும் நோக்கத்தோடு கேட்கப்பட்ட நம் வினாக்களுக்கு அவர் விடையளித்தார். இதோ, நமது வினாக்கள் - அவ ரளித்த விடைகள்:



டாக்டர். சி.இராமகிருஷ்ணன் எம்.டி.

**★ இரத்த அழுத்தம் (Blood Pressure) என்றால் என்ன?**

நம் உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் ஓடும் இரத்தம் ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தம் உள்ளதாக ஒரே சீரான துள்ளலோடு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த அழுத்தம்தான் இரத்தம் உடலின் பல்வேறு உறுப்புக்களையும் சென்றடைய உதவுகிறது. இரத்தத்தின் அழுத்தம் இதயம் சுருங்கும்போது அதிகமாகவும், விரிவடையும்போது குறைவாகவும் இருக்கிறது. இவ்வாறு இதயம் சுருங்கிய நிலையில் உள்ள இரத்த அழுத்தத்தை Systolic Blood Pressure அல்லது உயர் இரத்த அழுத்தம் என்றும், இதயம் விரிவடைந்த நிலையில் உள்ள இரத்த அழுத்தத்தை Diastolic Blood Pressure அல்லது குறைந்த இரத்த அழுத்தம் என்றும் கூறுகிறோம். நோய் நொடிகள் ஏதுமின்றிப் பூரண நலத்துடன் இருப்பவர்களின் உயர் இரத்த அழுத்தம் பாதரசமானியில் சுமார் 120 மி.மீ.-ம், கீழ்மட்ட நிலை இரத்த அழுத்தம் சுமார் 80 மி.மீ.-ம் இருக்கும். இதைத்தான் மருத்துவர்கள் குறிப்பிடும்போது ஒரு கோடிட்டு, அக்கோட்டிற்கு மேல் உயர் அழுத்தத்தையும், கோட்டிற்குக் கீழ் குறைந்த அழுத்தத்தையும் எழுதுகிறார்கள். எனவேதான், சாதாரண நிலையில் ஒருவரின் இரத்த அழுத்தம் 120/80 மி.மீ. என்று குறிப்பிடப்படுகிறது. பெண்களின் இரத்த அழுத்தம் ஆண்களை விடப் பொதுவாக சுமார் 10 மி.மீ. குறைவாகக் காணப்படுகிறது.

> **உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய பல நோய்களுக்கும் அடிப்படையாக இருப்பது உயர் இரத்த அழுத்தம்; ஆகவே, அதைப்பற்றிய முக்கிய விவரங்களை அறிந்து கொள்ளுவது நல்லதுதானே? இந்த அடிப்படை நோக்கத்தோடு நாம் கேட்ட கேள்விகளும், அவற்றிற்கு டாக்டர் சி.இராமகிருஷ்ணன் எம்.டி., அவர்கள் அளித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.**
>
> **சந்திப்பு: பி.எல்.ஆர்.**

**★ ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாக எப்படிக் கண்டறிவது?**

பொதுவாக ஒருவருடைய மேல் மட்ட நிலை இரத்த அழுத்தம் 140 மி.மீ.-க்கும் கீழ்மட்ட நிலை இரத்த அழுத்தம் 90 மி.மீ.-க்கும் அதிகமாக இருந்தால் அவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாகக் கருதுகிறோம்.

நோயின் ஆரம்ப நிலையில், இரத்த அழுத்தம் 24 மணி நேரமும் உயர்ந்து காணப்படுவதில்லை. அதிகமாக உணர்ச்சி வசப்பட்டாலோ, அதிகமாக உடல் வருந்தி உழைத்தாலோ, கோபாவேசப்பட்டாலோ அந்த நேரத்தில் மட்டுமே அதிகரித்து, பின் ஓய்வெடுக்கும்போது சாதாரண நிலையை அடைந்துவிடுகிறது. இதற்கு Labile Hypertension அல்லது இடைநிலை உயர் இரத்த அழுத்தம் என்று பெயர். நாளடைவில், 24 மணி நேரமும் இரத்த அழுத்தம் உயர்ந்தே

காணப்படுகிறது. இது Established Hyper Tension எனப்படும்.

இந்நோயின் தீவிரத்தைக் கீழ் மட்ட நிலை இரத்த அழுத்தத்தின் அளவினை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். கீழ்மட்ட நிலை இரத்த அழுத்தம் 90 முதல் 105 மி.மீ. இருந்தால், மிதமான உயர் இரத்த அழுத்த நோய் என்றும், 105 முதல் 115 மி.மீ. வரை இருந்தால், சற்றே தீவிர உயர் இரத்த அழுத்த நோய் என்றும், 115 மி.மீ.-க்கு மேல் இருந்தால் அதிதீவிர உயர் இரத்த அழுத்த நோய் என்றும் கூறுகிறோம் இவ்வாறு வகைப்படுத்திப் பார்க்கும் போது, உயர் இரத்த அழுத்த நோயாளிகளில் 90 முதல் 95 சதவிகிதத்தினருக்கு மிதமான நோயே இருக்கிறது. 5 முதல் 10 சதவிகிதத்தினருக்குச் சற்றே தீவிர மற்றும் அதிதீவிர உயர் இரத்த அழுத்தம் காணப்படுகிறது.

**★ ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் எப்போது ஏற்படும்?**

உயர் இரத்த அழுத்தம் என்பது பரம்பரை நோய்களில் ஒன்றாகும். இது தவிர, சுற்றுப்புறச் சூழ்நிலையும்கூட இந்நோய் ஏற்படக் காரணமாக அமைகிறது. உதாரணமாக, உணவில் அதிகமாக உப்புச் சேர்த்துக் கொள்ளும் மக்களிடையே இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஜப்பானியர்களைக் கூறலாம். அவர்கள் உணவில் உப்பின் அளவு அதிகமாகும். எனவேதான், ஜப்பானியர்களுக்கு உயர் இரத்த அழுத்த நோய் அதிகம் ஏற்படுகிறது.

மேலும், இந்நோய் உள்ளவர்களின் சிறுநீரகங்களுக்கு இரத்தத்திலிருந்து சோடியம் என்னும் தாது உப்பினைச் சிறுநீரில் வெளியேற்றும் திறன் குறைவாக உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உணவில் உப்பின் அளவு அதிகமாக இல்லாவிட்டால் கூட, சிறுநீரகங்கள் இந்த உப்பினைச் சிறுநீரில் வெளியேற்றுவது குறைவதாலேயே இந்நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது. அதே போல், உடல் பருமனாக இருப்பதும் இந்நோய் ஏற்பட ஒரு காரணமாகும். மேலும், கடின நீர் உள்ள இடங்களில் வாழும் மக்களைவிட, மென்மையான நீர் உள்ள இடங்களில் வாழ்பவர்களுக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். இவை தவிர, மனக்கவலை, பதற்றம், அன்றாட வாழ்க்கையில் உண்டாகும் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களும் இந்நோய் உண்டாவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன.

**★ இரத்த அழுத்தம் என்பது எத்தனை வகைப்படும்?**

இரத்த ஓட்டமானது உடல் முழுவதும் ஒரே சீராக, ஒழுங்கான அழுத்தத்துடன் நிகழவேண்டும்.

இதயமானது விரிகிற போது (Diastolic) 75-முதல் 90 மி.மீ. என்ற அளவிலும், இதயம் சுருங்குகிறபோது (Systilic) 100 முதல் 140 மி.மீ. என்ற அளவிலும் இரத்த அழுத்தம் இருக்கலாம்.

இதையே இயல்பான இரத்த அழுத்தம் (Normal Blood Pressure) என்று குறிப்பிடுகிறோம்.

ஒருவருடைய உடலில் இந்த இரத்த அழுத்தமானது இருக்க வேண்டிய சரியான அளவைத் தாண்டி 140/90 என்கிற அளவுக்கு மேலே போனால், அது உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure) அல்லது இரத்தக் கொதிப்பு (Hypertension) என்று சொல்லப்படும். 90/70 என்ற ரீதியில் அந்த அளவு இறங்கிவிட்டால், அதுவே குறைந்த இரத்த அழுத்தம். இதை Hypotension என்றும் கூறுவது உண்டு.

Hypertension -ஐ 1. Mild, 2. Moderate, 3. Severe, 4. Malignant என்று நான்கு வகையாகக் குறிப்பிடுவது வழக்கம்.





**● சீர்திருத்தம் என்பது தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையானதை மட்டும் வைத்துக் கொள்ளுதலேயாகும்.**

உயர் இரத்த அழுத்தம் Systolic Diastolic, Isolated Systolic Hypertension என்றெல்லாம் வகைப்படுத்தப்படும்.

**★ உயர் இரத்த அழுத்தம் என்பது எல்லா வயதினருக்கும் வரக் கூடியதா?**

எல்லா வயதினருக்கும் வரலாம். ஆனால் பெரும்பாலும் வயதானவர்களுக்கே வரும். 18 வயதிற்கு மேற்பட்டவர்களில் 30 சதவிகிதம் பேர் அதிக இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

**★ ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட என்னவெல்லாம் காரணங்கள் இருக்கின்றன?**

உயர் இரத்த அழுத்தம் உண்டாக இன்னதுதான் மூலகாரணம் என்று இன்னமும் திட்டவட்டமாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட நோயாளிகள் காரணம் ஏதும் இன்றி அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள்; அதை Essential Hypertension என்று கூறுவது உண்டு. ஆனால், சில வியாதிகள் காரணமாகப் பத்து சதவிகிதத்திற்கும் குறைவானோருக்கு இரத்த அழுத்தம் அதிகரிப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது (Secondary Hypertension).

உதாரணமாகச் சொல்லுவதென்றால் - Secondary Hypertension உள்ளோர், Steroid மற்றும் கருத்தடை மாத்திரை உண்போர், சிறுநீரக வியாதி உடையவர்கள், Coaretation of aorta Pheochrmocytoma, Cusing's - Syndrome போன்ற நோய்களுக்கு ஆளானோர் உயர் இரத்த அழுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

**★ உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தகுந்த சிகிச்சை பெறாமல் அலட்சியமாக இருந்தால் என்ன ஆகும்?**

அது மிகவும் ஆபத்து. அப்படிப் பட்டவர்களுக்குச் சில உடல் உறுப்புகள் பாதிக்கப்படக்கூடும். இதய நோய், பக்கவாத நோய் (Cerobro Vascular accident) சிறுநீரகக் கோளாறு, கண் பார்வை மங்குதல் ஆகியவற்றுக்கு அவர்கள் ஆளாகக் கூடும். அதிக அழுத்தம் உள்ள இரத்தத்தைச் சுருங்கி விரிந்து இரத்தக் குழாய்களில் சிரமத்தோடு செலுத்தவேண்டியிருப்பதால், வேலைப்பளு அதிகமாகி நாளடைவில் இதயம் தன் செயல் திறனை இழந்து-மாரடைப்பு (Heart attack) வரைகூட போய்விடக் கூடும். சிலருக்கு Uraemic Coma என்ற சுய நினைவில்லாத நிலைமையும் ஏற்பட்டுவிடும்.

**★ ஒருவர், மருந்து மாத்திரை சாப்பிடாமலே உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியாதா?**

முடியும். உயர் இரத்த அழுத்தமானது அதிக அளவில் இருக்கின்றவர்கள் - முதலில் தமது உடல் எடையைக் குறைக்க வேண்டும்; ஒரு நாளைக்கு மொத்தமே ஐந்து கிராம் தான் என்கிற அளவிற்குச் சாப்பாட்டில் உப்பைக் குறைவாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்; நாள் தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்; மது குடிப்பவரானால் அதைத் தவிர்க்க வேண்டும்; ஆத்திரம், ஆவேசம், பதற்றம் எதுவும் இல்லாமல் அமைதியாக இருக்கவேண்டும். தியானம், யோகாசனப் பயிற்சி மூலமும் உயர் இரத்த அழுத்தத்தை ஓரளவு குறைக்கலாம்.

ஒருவர் மிகுந்த மன உறுதியுடன் இவ்வாறெல்லாம் இருப்பாரானால், இரத்த அழுத்தத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்து விடலாம்.

**★ இரத்த அழுத்தம் உள்ளோர், உப்பை அடியோடு நிறுத்தி விடலாமா?**

அப்படிச், செய்யத் தேவையில்லை; அவற்றின் அளவைக் குறைத்துக் கொண்டாலே போதும். **சுருங்கச் சொல்வதனால் அதிக உப்புள்ள உணவு வகைகளான ஊறுகாய், வத்தல், வடகம் போன்றவற்றை அறவே தவிர்த்து, தயிர்ச்சாதத்திலும்**




உப்பைத் தனியாகப் போடுவதைத் தவிர்த்தாலே போதும் - ஒரு நாளைய உப்பின் அளவு 5 கிராம் அளவிற்குள் வந்தவிடும்.

**★ இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குக் கண்பார்வை மங்கும் என்கிறீர்களே, அதற்கு அடிப்படைக் காரணம் என்ன?**

அதிக உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு விழித்திரையில் (Retina) உள்ள இரத்தக் குழாய்களில் சில மாற்றங்கள் ஏற்படும். Hypertensive Retinopathy எனப்படும் அதில் நான்கு வகைகள் உண்டு.

விழித்திரையில் உள்ள இரத்தக் குழாய்கள் முதலில் சிறுத்தும் பின்பு ஒன்றின் மீது இன்னொன்று குறுக்கிட்டும் சிக்கலாகி அழுத்தம் உண்டாக்கிவிடும்; இரத்தச் சிதைவு உண்டாகும். மிகவும் அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு Papillaedema என்கிற பார்வை நரம்பினுடைய துவக்கத்தில் தடிப்பு உண்டாகும். அதனால் பார்வை கெட்டுப்போய்விடும்.

**★ ஒருவருக்கு அதிக இரத்த அழுத்தம் இருப்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?**

பெரும்பாலானவர்களுக்கு அதிக இரத்த அழுத்தம் என்பது ஏதேச்சையாகவே கண்டுபிடிக்கப்படுகிறது; அதாவது, வேறு ஏதாவது நோய் கண்டு மருத்துவரிடம் செல்லும் போது, பலவகைச் சோதனைகளை அவர் மேற்கொள்ளுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்போது இந்த விஷயமும் தன்னால் தெரிய வரும்.

**★ ஒருவர், அதிக இரத்த அழுத்தம் உடையவரானால் எப்படிப்பட்ட அறிகுறிகள் அவரிடம் காணப்படும்?**

சிலருக்குத் தலைவலி பலமாக இருக்கும்; ஒரு சிலருக்குத் தலை சுற்றும்; சிலருக்கு மூக்கில் இரத்தம் வரலாம்; ஒரு சிலருக்கு மயக்கம் ஏற்படும். பெரும்பான்மையானோருக்கு எவ்வித அறிகுறிகளும் இருக்காது.

**★ ஆண்களுக்கா, பெண்களுக்கா - யாருக்கு உயர் இரத்த அழுத்தம் அதிக அளவில் வரும்?**

பெண்களைவிட ஆண்களுக்குத் தான் அதிக அளவில் உண்டாகும்.

**★ உயர் இரத்த அழுத்தம் குறிப்பாக எப்படிப்பட்டவர்களுக்கு ஏற்படும்?**

தொடர்ந்து புகைபிடிப்பவர்கள், உடல் பருமனாக இருப்பவர்கள், இரத்தத்தில் அதிகக் கொழுப்புச் சத்து உள்ளவர்கள் ஆகியோருக்கு அதிக அளவில் வரும் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. பெற்றோர்களுக்கு இரத்தக் கொதிப்பு இருந்தால் பிள்ளைகளுக்கும் வர அதிக வாய்ப்பு உள்ளது.



★ சாதாரணமாக ஒருவருடைய **இரத்தத்தில் எந்த அளவில் கொழுப் புச் சத்து (Cholesterol) இருக்கலாம்?**

நூறு மில்லி இரத்தத்தில், சுமார் 150 முதல் 200 மில்லி கிராம் அளவு கொழுப்புச் சத்து இருக்க லாம்; இதைத் தாண்டினால் தொல்லைதான்.

**★ உயர் இரத்த அழுத்தம் இருப்ப வர்களுக்கு எவ்வாறான பரிசோத னைகள் மேற்கொள்ளப்படும்?**

சிறுநீரையும் - இரத்தத்தில் சர்க்கரை, கொழுப்பு, கால்சியம், Uricacid, Urea, Creatinine, Ecg., X-ray, I.Vp. என்ற வகையிலும் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படும். முப்பதுக்குக் கீழும், அறுபதுக்கு மேலும் இரத்த அழுத்தம் இருப்பவர் களுக்கு இவைகள் தவிர வேறுசில பரிசோதனைகளும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

★ கர்ப்பிணிப் பெண்களுக்கும் **உயர்ந்த இரத்த அழுத்தம் வருமா?**

வரலாம்; இது 'கர்ப்பம் சார்ந்த இரத்தக் கொதிப்பு' (Pregnancy related hypertension) எனப்படும். ஆனால், கருவுற்றிருக்கும் பெண்கள் அதற்கு ஆளானால் பிரசவமும் துன்பமாயிருக்கும்; பிறக்கும் குழந் தையும் பாதிக்கப்படும். கருவுற்றிருக்



கும் பெண்ணுக்கு, கால்வீக்கம், சிறுநீரில் அதிக உப்பு (Albumin) ஆகியவை கண்டாலே அவர்கள் மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும் (Toxemia of Pregnancy).

**★ அதிக இரத்த அழுத்தத்தைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திவிட முடியுமா?**

ஆரம்பத்திலேயே கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளித்தால் நோயின் வீரியத்தைக் கட்டுப்படுத்தலாம். கட்டுப்படுத்தப்பட்ட பிறகும் பெரும் பாலானோர் தொடர்ந்து மாத்திரை உட்கொள்ள வேண்டியிருக்கும். மிகச் சிலருக்கு மாத்திரைகளை நிறுத்திவிட்டாலும் பாதிப்பிருக் காது. உயர் இரத்த அழுத்தம் மிக அதிக அளவில் இருந்தால் அவர் உடலில் ஊசி மூலம் மருந்தை உட் செலுத்தவும் நேரிடும். (Hypertensive Emergencies) இந்த நோய் வராமலே தடுப்பது கடினம் என்றாலும், அதனால் உண்டாகும் தீயவிளைவு களை மருந்து மாத்திரையால் மட்டுப் படுத்தலாம்.

**★ உயர் இரத்த அழுத்தம் உள்ள வர்கள் உணவு முறைகள் எவ்வாறி ருக்கலாம்?**

உப்புக் குறைவாகவும், கொழுப்புச் சத்து உள்ளவற்றைத் தவிர்த்தும் சாப்பிட்டு வந்தால் போதுமானது. காபி, டீ ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். மது அருந்துவதைத் தவிர்க்கலாம். முட்டையின் மஞ்சள் கரு, ஆடு - மாடு இறைச்சி உண் பதை விட்டுவிடலாம். மீன் சாப்பிட லாம். சூரியகாந்தி எண்ணெய் அல்லது நல்லெண்ணெயைச் சமை யலுக்குப் பயன்படுத்தலாம்.

இதற்கு மேலும் உயர் இரத்த அழுத்தம் மட்டுப்படாவிட்டால் அவரவரும் தங்கள் குடும்ப டாக்ட ருடன் கலந்து பேசி அவர் ஆலோ சனைப்படி நடக்கலாம். இவற்றின் மூலம் - 'Down with Hypertension' என்கிற உலக சுகாதார நிறுவனத் தின் குரலுக்கு நாமும் வலிவூட்ட லாம் அல்லவா? ●

## சென்னையில் குடிநீர் விநியோகம் அதிகரிப்பு

**தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை ஆரம்பமானதைத் தொடர்ந்து கடந்த சில நாட்கள் சென்னையில் பெரும் மழை பெய் தது. இதன் பயனாகச் சென்னைக் குக் குடிநீர் வழங்கக்கூடிய மூன்று ஏரிகளிலும் நீர் மட்டம் உயர்ந்தது.**

**இந்த மூன்றுஏரிகளின் மொத்தக் கொள்ளளவு 6,483 மில்லியன் கன அடியாகும். தற்போது 6,200 மில்லியன் கனஅடி தண்ணீர் இந்த ஏரிகளில் நிரம்பியுள்ளது. ஏரிகளில் நீர்மட்டம் உயர்ந்திருப்பதால் சென்னைக்குக் குடிநீர் விநியோகத்தை அதிகரிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

**தற்போது சென்னை நகருக்கு நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் காலன் குடிநீர் விநியோகம் செய்யப் பட்டு வருகிறது. இந்த அளவை 55 மில்லியன் காலனாக உயர்த்தும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது.**

**வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஏரிகளின் நீர் மட்டம் மறுபரிசீலனை செய்யப் பட்டு, தேவையேற்படின் குடிநீர் விநியோகம் தினசரி 60 மில்லியன் காலனாக உயர்த்தப்படும்.**

## கூடுதல் ரயில் பெட்டி தயாரிப்பு

**சென்னையிலுள்ள இரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை யில் (ஐ.சி.எப்.) ஆண்டொன்றுக் குச் சராசரி ஆயிரம் இரயில் பெட் டிகள் தயாரிக்கப்படுகின்றன. இனி மேல் இங்குக் கூடுதலாக இரயில் பெட்டிகள் தயாரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி இனி ஆண்டொன்றுக்குச் சராசரி 1,150 இரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும்**

# தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம்

தமிழ்நாட்டிலேயே தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம் முன்னணியில் உள்ளது. 'இந்தியாவின் மான்செஸ்டர்' என அழைக்கப்படும் கோவை மாவட்டத்தில் இந்தியாவின் மொத்த நூல் உற்பத்தியில் 30 சதவிகிதம் தயாராகிறது. 134 நடுத்தர மற்றும் பெருந்தொழில்கள் இங்கு இயங்கி வருகின்றன. 1986-87-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தொழிற்சாலைத் துறையில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் உற்பத்தி ரூ.1,56,924 இலட்சங்களாகும்.

இது தவிர 500 வார்ப்படச்சாலைகள் உள்ளன. இவை மின் மோட்டார், நெசவு இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்கள் ஆகியவற்றைத் தயார் செய்து வருகின்றன. கோவை மாவட்டத்தில் மின் மோட்டார், பம்புகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், மிக்சிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இத்துறையில் கோவை, இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்றது. இந்தியா முழுவதுக்கும் இங்கு தயாரிக்கப்படும் இயந்திரங்கள் அனுப்பப்படுகின்றன. இங்கு 16,481 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.276 கோடி முதலீட்டில் 1,61,799 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

தொழில்களைப் பெருமளவு தொடங்கி, வேலைவாய்ப்புகளைப் பெருக்குவது முகமாக, இம்மாவட்டத்தில் பொள்ளாச்சி, வால்பாறை, பல்லடம் வட்டங்கள் தொழிலில் பின்தங்கியவையாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்குத் தொடங்கும் தொழில்களுக்கு நிலையான முதலீட்டில் 15 சதவிகிதம் மானியம் அளிக்கப்படுகிறது. மேலும், விற்பனை வரி தள்ளிவைப்பு, ஜெனரேட்டர் மானியம், மின் மானியம் முதலியவையும் அளிக்கப்படுகின்றன. இந்தச் சலுகைகளால் சிறுதொழில் வளர்ச்சி, இந்த மூன்று பின்தங்கிய மாவட்டங்களிலும் பெருகும் என்பது திண்ணம்.

தொழிற்சாலைகள் பெருக இடவசதி முதல் தேவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு இம்மாட்டத்தில் ஏற்கெனவே கோவை (குறிச்சி மற்றும் பீளமேடு) திருப்பூர், அனுப்பர்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, சிறுமுகை முதலிய இடங்களில் தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. மேலும், மேட்டுப்பாளையம், மடத்துக்குளம், சூலூர், மலுமிச்சம்பட்டி, கோவை முதலிய இடங்களில் தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்றுமதி பெருமளவில் பெருக்கப்பட வேண்டிய அவசியம் ஆகிறது. இதனால் பின்னலாடை ஏற்றுமதி செய்யும் தொழில் முதலியவைகளைத் தனியாகத் தொடங்க, திருப்பூர் அருகில் உள்ள முதலிபாளையத்தில் 86.65 ஏக்கர் நிலப்பரப்பில் 150 தொழிற்கூடங்கள் நடத்த திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக 75 தொழிற்கூடங்கள் கட்டும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது. தற்போது ஏறத்தாழ ரூ.600 கோடி வரை பின்னலாடை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் ஏற்றுமதி ரூ.1,000 கோடியை எட்ட உள்ளது.



இத்தொழில் வளர்ச்சியால், பின்னலாடைத் தொழிலைச் சேர்ந்த பல துணைத் தொழில்கள் வளர்ச்சியடையும்.

இது தவிர, கூட்டுறவு அடிப்படையில் கீழ்க்கண்ட சங்கங்கள், தொழிற்பேட்டை நிறுவுவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளன.

1. சேரன் கூட்டுறவுத் தொழிற்பேட்டை, கோவை.

2. அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தெக்கலூர்.

3. தென்னிந்திய பின்னலாடைக் கூட்டுறவுத் தொழிற்பேட்டை, திருப்பூர்.

கம்பளி நெசவுத் தொழிலில் தற்போது ஏற்றுமதி வாய்ப்பு அதிகம் உள்ளதால், இம்மாவட்டத்தில் பொள்ளாச்சி அருகே ஓர் தொழிற்பேட்டை அமைக்க நிலத் தேர்வுப் பணி நடந்து வருகிறது.

பல்லடம் வட்டம் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு இருப்பதால், இந்த வட்டத்தில் உள்ள கோவை-பல்லடம் சாலையில் பெருமளவில் தொழில்கள் வரவாய்ப்பு உள்ளது. எனவே, இந்தச் சாலையை ஓர் தொழில் வளர்ச்சி இடைவெளியாக அமைக்க உத்தேசிக்கப்பட்டு தொழில் அதிபர்களுடனும் தொழில் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுடனும் ஓர் கூட்டம் நடத்தப்பட்டு, இதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டத்தில் சுமார் 17,000 சிறுதொழில் நிறுவனங்களும், 140 நடுத்தர மற்றும் பெருந்தொழில்களும் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் இயந்திரங்கள் மற்றும் பொருட்கள் பற்றித்தெளிவாக விளக்க, கோவையில் ஒரு நிரந்தரத் தொழில் காட்சிக்கூடம் அமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. அரசிடம் இதற்கான நிலம் கோரப்பட்டு இருக்கிறது.

இம்மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு 850 புதிய சிறு தொழில்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 8,300 தற்காலிகச் சான்றிதழ்கள் அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இரசாயனத் தொழில்கள், மருந்துப் பொருள் உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், பொறியியல், மின்னணு, தாமிரக் கம்பி, அலுமினியம், பி.வி.சி. கட்டடப் பொருட்கள், பருத்தி நூல், துணி, பின்னலாடை, கம்பளப் பின்னலாடை, கயிற்றுப் பொருட்கள் முதலிய தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் உள்ளன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தைத் தொழில் துறையில் முதலிடமாக, முதல் மாநிலமாக ஆக்குவதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகளையும், அரசு வழங்கும் சலுகைகளையும் பயன்படுத்தி படித்த இளைஞர்களும், தொழிலதிபர்களும் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், நமது தமிழ்நாடு தொழில் துறையில் முதலிடம் வகிக்கப்போவது உறுதி.

**- தா. மனோகரன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**



## பேரூராட்சிகளில் சாலைகளைப் பராமரிக்க ரூ.40 இலட்சம் மானியம்

தமிழ்நாட்டில் பேரூராட்சிகளின் பொறுப்பில் சுமார் 10,000 கி.மீ. அளவுக்கு மண், சரளை, கப்பிச் சாலைகள் இருக்கின்றன. இப் பேரூராட்சி சாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், நிலைப்படுத்துவதற்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1991-92-ஆம் ஆண்டிற்காக ரூ.40 இலட்சம் மானியமாக வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார். இத்தொகையுடன் பேரூராட்சிகளும் அவற்றின் நிலைகளுக்கேற்ப 20 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை செலவிட்டுச் சாலைகளை மேம்படுத்தும்.

## தனியார் பள்ளி ஊழியர்களுக்கு புதிய சலுகை

அரசு ஊழியர்கள் பணியின் போது இறந்து போனால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் திட்டம் 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை அளிக்கும் திட்டம் 1983-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17-ஆம் தேதி முதல் தான் அமலில் இருந்து வருகிறது. இதை, சுமார் 6 ஆண்டுகள் முன்தேதியிட்டு, அரசு ஊழியர்களுக்கு அளித்ததைப்போல் 1977 ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் அமல்படுத்த தற்போது தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.






# படைவீரர் புகழ்பாடும் கொடிநாள்

## - மாண்புமிகு முதல்வர் உரை -

**பெ**ருமதிப்பிற்குரிய தமிழகப் பெருங்குடி மக்களே!

பாரத நாட்டினைப் பரிவுடன் பாதுகாக்கும் முப்படைவீரர்களைப் பாராட்டி மகிழும் நாள், பெருமைமிகு படைவீரர் புகழ்பாடும் 'கொடி நாள்'! எண்ணற்ற தியாகங்களைச் செய்து, நாட்டைப் பாதுகாக்கும் புனிதப் பணியில் ஈடு பட்டிருக்கும் இவ்வீரர்களின் மகத்தான சேவை யைப் போற்றி, தியாகத்தை மதித்து அவர்களின் நலனில் நாம் அக்கறை காட்டி, நன்றி செலுத்தும் நாள்தான் கொடி நாள்.

தேசத் தலைவர்கள் பலர் அரும்பாடுபட்டுப் பெற்ற நமது சுதந்திர நாட்டினை எந்நாளும் கட்டிக் காத்திட வேண்டிய அவசியத்தை நாம் அனைவரும் அறிவோம். இந்த மாபெரும் பொறுப்பினை முன் னுரிமையோடு வகிக்கின்ற முப்படை வீரர்களின் கடமையுணர்ச்சிக்கு நன்றிக் கடன் செலுத்த நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம். நமது நாட்டினை அன்னியர்களின் ஆதிக்கத்திலிருந்தும், எதிரிகளின் ஊடுருவலில் இருந்தும் காப்பாற்ற, **தங்களை மெழுகுவர்த்தி போல் அழித்துக்கொள் ளும் அற்புதமான தியாகத்தைப் புரிவோர்தான் முப்படை வீரர்கள்.**

நமது படைவீரர்கள் ஏற்றிருக்கிற பணியின் தன்மை, அபாயங்களும், இன்னல்களும் நிறைந் தன. நமது தாய்த்திருநாட்டினைக் காக்க தமது இன்னுயிரையும் தயங்காமல் ஈந்திட்ட எண்ணற்ற வீரர்களைக் கொண்டதுதான் நமது முப்படை.

இந்தியச் சுதந்திரத்திற்குப் பின், இந்தியாவின் மீது போர் தொடுத்த நாடுகளின் ஆக்கிரமிப்புகளை வெற்றிகரமாக முறியடித்து, இன்றைக்கு நாம் சுதந்திரக் காற்றினைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம் என்றால், அது தியாக சீலர்களான படைவீரர்கள் புரிந்த கைம்மாறு கருதாத வீரப் பணியின் விளைவினால்தான்!

1962, 1965 மற்றும் 1971 ஆகிய ஆண்டுகளில் இந்தியா மீது தொடுக்கப்பட்ட போர்களில், எண்ணற்ற படைவீரர்கள் இரத்தம் சிந்தி, இன்னுயிரை வெற்றிக்குக் காணிக்கையாக்கி, நாட்டைப் பாதுகாத்த வீர வரலாறு நம் கண்முன் இன்னமும் நிழலாடுகிறது. மேலும் நமது படைவீரர்கள் தன்னலம் கருதா அமைதி காக்கும் பணியினை, உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஆற்றிய சிறப்பு மகத்தானது. **இந்தியப் படைகளுக்கு உள்ள மற்றொரு சிறப்பு என்னவென்றால், நமது இந்தியப் படை, எதிர்க்க வேண்டியதை எதிர்த்து, காக்க வேண்டியதைக் காத்து, அழிக்க வேண்டியதை அழித்ததோடு, அற்புதமாக அமைதிப் பணியினையும் பொறுப்போடு ஆற்றி வருவதுதான்.**

அடுத்து இயற்கையின் சீற்றங்கள், தாங்கொணா இன்னல்கள் விளைவிக்கும்போதும், பாதிக்கப்பட்டோரின் அல்லல்களைத் தீர்க்கும் பணியிலும் துடிப்புடன் தங்களை ஈடுபடுத்திச் செயல்படுவோர் நமது முப்படை வீரர்களே. இப்படி பல்வேறு வகையில் பரந்து விரிந்துள்ள நமது படைவீரர்களின் சிறப்புமிகு சேவை, எண்பது கோடி மக்கள் நலனைப் பாதுகாக்கின்ற மகத்தான பணியிலும் அன்றாடம் பயன்படுகின்ற பாங்கினைக் கண்டு நாம் பெருமிதம் அடைகிறோம். எனவேதான், இவர்களது சேவையைப் பாராட்டி, இந்திய அரசு தீரச் செயல்கள் புரிந்த படைவீரர்களுக்குப் 'பரம் வீர் சக்ரா' போன்ற உயர் விருதுகளை வழங்கி மகிழ்கிறது.

பரிசுகள் மட்டும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். **எனவே, நம்மைப் பாதுகாக்கின்ற படைவீரர்களின் குடும்பங்களை, அவர்கள்தம் மனைவி, மக்கள், பெற்றோர் ஆகியோரைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்ததாகும்.** படைவீரர்களது குடும்பங்களின் நல்வாழ்விற்கும் பாதுகாப்பிற்கும், பொருள் உதவியும், பிற உதவிகளும் செய்திட வேண்டும் என்கிற சூளுரையை நாடு முழுவதும் கொண்டாட இருக்கும் இந்தக் கொடி நாளில் நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



தமிழ்நாட்டில் முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர் ஆகியோரது நலம் மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றினைக் காத்திடவும், காலத்தோடு அவர்களுக்கு உதவிடவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலம் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பல்வேறு திட்டங்கள் இவ்வாறு செயல்பட்டு வந்தாலும், குறிப்பாக ஒருசிலவற்றை மட்டும் சுட்டிக்காட்டி, தமிழக அரசு படைவீரர்கள் மேல் என்றென்றும் கொண்டுள்ள பெருமதிப்பையும், அன்பினையும் எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்.

- முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்புத் தர சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவு;
- அவர்களைச் சார்ந்தவர்களுக்கு மருத்துவ, தொழில்நுட்பக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு;
- தேர்வாணைக் குழுவினால் நடத்தப்படும் தேர்வுகளில் தேர்ச்சிபெற ஏதுவாகச் சிறப்பு முன் பயிற்சி;
- முன்னாள் படைவீரர் வாணிபக் கழகத்தின் மூலம் சுயவேலைவாய்ப்பு;
- இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடன் இணைந்து செயல்படுத்தப்படும் சுயதொழில் கடனுதவித் திட்டம்;

ஆகியவை முன்னாள் படைவீரர் தாங்களே சொந்தமாகத் தொழில் செய்து வளர வழிவகுக்கின்றன.

இதுபோன்றே முன்னாள் படைவீரர்களின் விதவைகள், அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்குக் கல்வி, திருமணம், மற்றும் தொழில் ஏற்படுத்தித் தருதல், வீட்டுவசதி வாரியத்தில் 7½ சதவிகித ஒதுக்கீடு ஆகியவையும் அளிக்கப்படுகின்றன.

**இவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், கடந்த ஐந்து ஆண்டுகளாக கொடி நாள் நன்கொடை நிதி வசூலில், இந்தியாவிலேயே நாம் முதலிடம் வகிக்கிறோம் என்கிற பெருமையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டு வருகிறோம்.** 1981-இல் ரூ.17 இலட்சங்களாக இருந்த கொடி நாள் நன்கொடை வசூல் 1990-இல் ரூ.1.45 கோடியாக உயர்ந்திருக்கிறது. இவ்வாண்டு இந்த நன்கொடைகள் இன்னமும் பல்கிப்பெருகும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இந்த நலப்பணிகள், மேலும் சீரிய முறையில் செவ்வனே தொடர தமிழக மக்கள், தங்கள் நன்கொடையினைப் படைவீரர் கொடி நாளின் பொருட்டு, தாராளமாக மனமுவந்து வழங்க வேண்டுமென்ற இந்த வேண்டுகோளை நான் உங்கள் முன் வைத்து விடைபெறுகிறேன்!

***கொடி நாளையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் வானொலி (5.12.91) மற்றும் தொலைக் காட்சியில் (4.12.91) ஆற்றிய உரை***

# கொடிநாள் நிதி வசூல் மூலம் முன்னாள் படைவீரர்கள் பெறும் பயன்கள்.

**வேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| வேலையில் அமர்த்தப்பட்டோர் | 1,074 |

**பயிற்சி**

| | |
|---|---|
| தையற்கலை | 6,653 |
| தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து | 1,565 |
| பிஎஸ்ஆர்பி | 211 |

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம்:**

முன்னாள் படைவீரர் கழகம் நிறுவப்பட்டு, கீழ்கண்ட பணிகளில் முன்னாள் படைவீரர்/சார்ந்தோர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| அச்சுக்கூடம் | : 7 |
| சிற்றுந்துகள் நிறுத்தக்கட்டணம் வசூலிக்கும் திட்டம் | : 80 |
| சிற்றுந்துகள் நிறுத்தக்கட்டணம் வசூலிக்கும் புதிய திட்டம் | : 25 |
| பல்லவன் மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து பயணச் சீட்டுகள் விற்கும் திட்டம் | : 80 |
| மின்னணு/தொலைதொடர்பு நிர்வாகத் திட்டம் | : 48 |
| மின்னணுச் சங்கம் | : 12 |
| பாதுகாவலர்கள் | : 544 |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தண்ணீர் வழங்குதல் | : 18 |
| ஓட்டுநர் | : 1 |

**சுயவேலைவாய்ப்பு**

| | | |
|---|---|---|
| ப்ளிஸ் | : | 3,953 முன்னாள் படைவீரர்கள் ரூ.7.40 கோடி கடன் பெற்றுள்ளனர். |
| பெக்சம் | : | 783 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். |
| செம்பெக்ஸ் 1 | : | 641 நபர்கள் ரூ.21 கோடி கடன் பெற்றுள்ளனர். |
| செம்பெக்ஸ் 2 | : | 169 நபர்கள் ரூ.51.38 இலட்சம் கடன் பெற்றுள்ளனர். |
| மொத்த மானியம் | : | 287 நபர்கள் பெற்றுள்ளனர். |
| ஜெய்ஜவான் கடைகள் | : | 305 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. |
| ஆவின் நிலையங்கள் | : | 230 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. |
| தொழில்மனை ஒதுக்கீடு | : | 10 விழுக்காடு. |
| உடைகள் தைப்பதற்கான ஆணைகள் | : | 1,89,410 சீருடைகள் |
| யுனி டிரஸ்டு முகவர்கள் | : | 54. |

**ஜவான்ஸ் பவன்**

தற்போது 8 மாவட்டங்களில் உள்ளது. மேலும் கீழ்க்கண்டவை கட்டுமானப் பணியில் உள்ளன.

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி | ரூ.27.65 இலட்சம் |
| 2. இராமநாதபுரம் | ரூ.31.60 இலட்சம் |
| 3. திருநெல்வேலி (சி.எஸ்.டி.கேன்டீன்) | ரூ.13.04 இலட்சம் |

**முன்னாள் படைவீரர் மையங்கள்:**

தற்போது 14 மாவட்டங்களில் உள்ளது.

| | |
|---|---|
| இறுதிச் சடங்கு | ...ரூ.6.94 இலட்சம் |
| ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களின் செயற்கை உறுப்புகளுக்காக | ...ரூ.0.20 இலட்சம் |
| வயதான முன்னாள் படைவீரர்/புற்றுநோய், தொழுநோய் மற்றும் பார்வையிழந்தோருக்கு உதவி | ...ரூ.4.04 இலட்சம் |
| குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை | ...ரூ.5.41 இலட்சம் |
| தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையற்கலைக் கூடங்கள் | ...ரூ.4.87 இலட்சம் |
| விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | ...ரூ.0.81 இலட்சம் |
| முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர் முன்னாள் படைவீரர்கள்/விதவைகள் ஓய்வூதியம் | ... ரூ.10.50 இலட்சம் |
| உடனடி நிவாரணம் | ...ரூ.5.33 இலட்சம் |
| ப்ளிஸ் வட்டி மானியம் | ... ரூ.5.20 இலட்சம் |
| போரில் இறந்த வீரர்களின் விதவைகள்/போரில் ஊனமுற்றோருக்கு உதவி | ...ரூ.2.17 இலட்சம் |
| மாதாந்திர மானியம் | ...ரூ.3.66 இலட்சம் |
| திருமண மானியம் | ...ரூ.8.31 இலட்சம் |
| மொத்த மானியம் | ரூ.5.52 இலட்சம் |
| இருதய அறுவை சிகிச்சை | ...ரூ.0.70 இலட்சம் |
| தொழிற்கூடம் கட்டுவதற்கான மானியம் | ...ரூ.1.25 இலட்சம் |
| பயன்பெற்ற மொத்த முன்னாள் படைவீரர்கள் | ...25,000 |
| பயன்படுத்தப்பட்ட தொகை | ...ரூ.100.76 இலட்சம் |

# கல்லும் சொல்லாதோ கதை!

**ம. காந்தி**
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
கடலூர், தென்னார்க்காடு மாவட்டம்.

மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பணியாற்றி வரும் நிறுவனங்களுள் அருங்காட்சியகமும் ஒன்றாகும். அருங்காட்சியகங்கள் இந்நிலையில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் அருங்காட்சியகம் அமைத்தல் என்ற தமிழ்நாட்டு அரசின் கொள்கையின்படி தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில், ஓர் அரசு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு 30.11.1989 முதல் இயங்கி வருகின்றது. இது தமிழ்நாட்டு அரசின் அருங்காட்சியகத் துறையைச் சேர்ந்தது.



கடலூர்-சித்தூர் நெடுஞ்சாலையில் இருந்து அருங்காட்சியகத்தைப் பார்த்தாலே அருங்காட்சியகத்தின் வெளிச்சுவரில் 'டயோனசரஸ்' என்ற பண்டைய காலத்துப் பெரிய விலங்கு, கண்ணாடி இழையிலான மூன்று மீட்டர் உயர மாதிரி ஒன்று பதித்து வைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. அது, காட்டில் சுற்றுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. அதுவே அருங்காட்சியகத்தை மக்கள் பார்க்க வேண்டும் என்ற அவாவை எழுப்பும் காட்சிப் பொருளாகும்.

கடலூர் அரசு அருங்காட்சியகம் பல நோக்குடையதாகும். இதன் கண் மாவட்ட அறிமுகக் கூடம், கற்சிற்பக் கூடம், படிமக் கூடம், தொழிற்சாலைக் கூடம், மானிடவியல் கூடம், மரச் சிற்பம் - ஓவியக்கூடம், இயற்கையியல் கூடம் என்று பலவகை அடங்கியுள்ளன.

அருங்காட்சியகத்தின் நுழை வாயிலில் வலது பக்கத்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமால் கற்சிலை நிற்கின்றது. இது அழகும் கலை நுணுக்கமும் மிகுந்தது. நுழைவு வாயிலின் இடது பக்கத்தில் அடக்கமும், கம்பீரமும் கொண்ட கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சண்டிகேசுரர் கற்சிலை பொலிவுடன் விளங்குகின்றது. இவை பார்வையாளர்களுக்கு எழிலையும், ஆய்வாளர்களுக்குக் கலையின் தன்மையையும், காலத்தையும் மன்னர்களையும் நினைவுபடுத்துகின்றன. இவ்விரு



விடுமுறை நாட்களில், படிப்பு வாசனை இல்லாத உழவர்களுக்கும், எளியவர்களுக்கும் எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுப்பது, சுகாதார முறைகளை எடுத்துச் சொல்லி அவற்றைப் பரப்புவது போன்ற ஆக்க வேலைகளில் மாணவர்கள் ஈடுபடலாம்.

—அண்ணல் காந்தியடிகள்

சிலைகளின் இருமருங்கிலும் அமர்ந்த நிலையில் இருக்கும் குரங்குகளின் புடைப்புச் சிற்பங்களின் நிலை வியப்பிற்குரியது. இந்தக் குரங்குகளின் சிற்பங்கள் கல் தூண்களின் பகுதிகளாகச் செதுக்கப்பட்டவை. குரங்குகளின் தோள் அணி ஐரோப்பியர்களின் தோள் அணியை ஒத்துள்ளதால் இச் சிற்பங்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டு இருக்கலாம் என்று எண்ணக்கூடிய நிலை வருகின்றது.

இவைகளைக் கடந்து அருங்காட்சியகத்திற்குள் நுழைகையில் பார்வையாளர்களுக்கு இடது பக்கத்தில் 1.70 மீட்டர் உயரமுள்ள கண்ணாடி இழையிலான காளியின் மாதிரி, காட்சியில் காணலாம். அடுத்து வருவது தென்னார்க்காடு மாவட்டத்தின் அறிமுகக் கூடம். இங்கு செஞ்சி கோட்டைகளின் நிழல் படங்களும், திருவதிகையிலுள்ள புத்தர் சிலையின் நிழல் படமும் மேலும் பல கோயில்களின் நிழல் படங்களும் காண வருவோரை அவ்வூர்களுக்கும் அக்கோயில்களுக்கும் சென்று நேரில் பார்க்கத் தூண்டுவனவாம்.

கற்சிற்பக் கூடத்தில் காட்சியில் இருக்கின்ற சுப்பிரமணியர் சிலை புடைப்புருவமாக இருப்பினும், கலை நயம் மிக்கது. நிற்கும் அழகே அழகு. இடது மேல் கையில் சேவல் கொடியை ஏந்தி இருக்கிறார். போர் வீரன் சிலையில் காணப்படும் மிடுக்கான மீசையே அவன் பெரும் வீரம் படைத்தவன் என்பதை இயம்புகின்றது. கைகளில் வில்லும் அம்பும் இருக்கின்றன. இக்கூடத்தில் மேலும் வீரபத்திரர், பைரவர், சூரியன், கற்சிலைகள் காண்பவரைக் கவர்ந்து இழுப்பவனவாகும்.

அடுத்து இருப்பது படிமக் கூடம். நடராசர் செப்புத் திருமேனி கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இச்சிலையை வார்த்து அழகுபடுத்திய கலைஞனின் திறத்தை இத்திருமேனி எடுத்துரைக்கின்றது. சோமாஸ்கந்தர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதில் பிற்காலச் சோழர்களின் சிற்பத்திறன் சிறப்பாகக் காணப்படுகிறது. படிமக் கூடத்தின் பெருமையைப் பகரவே கல்பட்டு கிருஷ்ணன் படிமம் நிற்கின்றது. காட்சிக்கு எளிதானாலும், தெய்வ மணம் திகழ திரட்சியாகச் செய்துள்ளான் கலைஞன். தலையணியின் அழகும் இடுப்பிலுள்ள எளிய அணிகலன்களும் இயற்கையாக உள்ளதைக் கூறுகின்றன. அப்பரும், திருஞான சம்பந்தரும், மாணிக்க வாசகரும் தங்களுடைய இறை பக்தியை முகத்தில் காட்டுவது சிலையைச் செய்து வார்த்த ஸ்தபதிகளை எப்படி நினைக்காமல் இருக்க முடியும்.

தொழிற்கூடத்தில் நெய்வேலியின் பழுப்பு நிலக்கரி உள்ளது. பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் திறந்த வெளிச் சுரங்கம் நிழல் படமாக வைக்கப்பட்டிருக்கின்றது.

அருங்காட்சியகத்தின் மேல் மாடியில் ஒரு பகுதியில் மானிட வியல் பிரிவும் வரலாற்றிற்கும் முற்பட்ட காலப்பிரிவும் உள்ளன. தென்னார்க்காட்டில் மலை வளம் மிக்கது கல்வராயன் மலையாகும். கல்வராயன் மலையில் மலையாளிகள் என்ற மலை வாழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் வீட்டில் பயன்படுத்தும் தட்டு முட்டுச் சாமான்களும் விவசாயக் கருவிகளும் காட்சியைக் கவின்மிக்கதாக்குகின்றன.

இசைக் கருவிகளில் தோல் கருவிகளும், பேரி, எக்காளம், கொம்பு போன்ற காற்றுக் கருவிகளும் மக்கள் அறிந்துகொள்ளக்கொலு வீற்றிருக்கின்றன. வரலாற்றிற்கு முற்பட்ட மனிதன் பயன்படுத்திய பழைய கற்காலக் கருவிகளும் புதிய கற்கால மக்களின் கல் ஆயுதமும் கற்போர்க்கு களிப்பளிப்பன. இக்கூடத்தில் தோல் பொம்மைகள் உயிருள்ளோரே நேரில் ஆடுவது போல் இருக்க அவ்வளவு பெரியதாகவும் அணிகலன்கள் விளங்குவதாகவும் இருக்கின்றன. முற்காலத்தில் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வெடிக்க வெடி மருந்து பயன்பட்டது. அது ஈரமாகாமல் இருக்கவும் எரிந்து போகாமல் இருக்கவும் இரும்புக் குடுவைகளில் போட்டுப் பாதுகாத்தனர். அந்த வகையில் மூன்று இரும்புக் குடுவைகளைக் கண்டு வியக்கலாம். திருக்கோயிலூர் வட்டம் தனக்களந்தல் கிராமத்தில்திருமணங்களின் போது பவனி வந்த காட்டுநாயக்கன் மலைவாழ் மக்களின் பல்லக்கு இங்குள்ளது.

ஓவியங்களும் இந்திய நாணயங்களும் மரச் சிற்பங்களும் ஓர் அறையில் பார்க்கலாம்: வளர்கலை ஓவியங்கள் பெரிய அளவில் கண்கவர் பல வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. ஓவியர்களின் கை வண்ணம் தெளிவாக விளங்குகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் வெளியிட்ட முத்திரை நாணயங்கள் முதல் குப்தர் கால நாணயங்கள், தென்னிந்தியாவை ஆண்ட சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர்கள் நாணயங்கள், கிழக்கிந்திய நாணயங்கள் வரையுள்ளவை அவ்வக்கால வரலாறு, கலை, பொருளாதாரம் ஆகியவற்றை அறிய உதவியாகின்றன. கோயிலின்

## தமிழ்நாட்டில் ஏழு மாவட்டங்களில் அறிவொளி இயக்கங்கள் நடத்த முதல்வர் அவர்கள் உத்தரவு

**த**மிழ்நாட்டில் எழுத்தறிவின்மையை முற்றிலுமாக நீக்க முதலிடம் வழங்கப்படும் என அண்மையில் நிதிநிலை அறிவிப்பின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

அரசின் தொடக்க நடவடிக்கையாக 1991-92-இல் அறிவொளி இயக்கங்கள் நடத்த ஏழு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. இத்திட்ட செலவினத்தில் மூன்றில் இரண்டு பங்கினை மத்திய அரசும் மூன்றில் ஒரு பங்கினை மாநில அரசும் ஏற்றுக்கொண்டுள்ளன.

மேற்கண்ட திட்டப்படி காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை, கன்னியா குமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை, வட ஆர்க்காடு- அம்பேத்கர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற அறிவொளி இயக்கங்கள் குறித்து தலைமைச் செயலகத்தில் 1.12.91-இல் ஆய்வு செய்யப்பட்டது.

தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., திரு சாம் பிட்ரோடா, பிரதமரின் அறிவுரைஞர், திரு அனில் போர்டியா, மத்திய அரசின் கல்வித்துறைச் செயலாளர், திரு எல். மிஸ்ரா, (தேசிய எழுத்தறிவு இயக்கத் தலைமை இயக்குநர், புதுடெல்லி) மற்றும் மாநிலக் கல்வித் துறைச் சிறப்புச் செயலாளர் திரு ஆர்.சி. பாண்டா, இ.ஆ.ப., ஆகியோர் மேற்கண்ட ஆய்வை நடத்தினர். காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி- கட்டபொம்மன், மதுரை, வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட ஆட்சியர்களும் இக்கூட்டத்தில பங்குபெற்றனர்.

அறிவொளி இயக்கமானது மிகச்சீரிய பாதையில் இயங்குவதாகத் தெரிகிறது. காமராசர், புதுக்கோட்டை, பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் 1992 தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் 90 சதவிகிதம் விழுக்காடு எழுத்தறிவு இலக்கினை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிற நான்கு மாவட்டங்களும் இந்த இலக்கினை 1992-ஆம் ஆண்டின் இறுதியில் பெறும்.

## ஓய்வூதியம் பெறுவோர்க்குக் கூடுதல் அகவிலைப் படி

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மத்திய அரசு கொடுத்திருப்பது போல் மேலும் ஒரு அகவிலைப்படி தவணையை 1.7.1991 முதல் வழங்க ஆணையிட்டுள்ளார். அதற்கிணங்க, ஓய்வூதியம் ரூ.1,750-க்குள் பெறுபவர்களுக்கு 60 சதவிகிதமும், ரூ.1,750-லிருந்து ரூ.3,000 வரை பெறுபவர்களுக்கு 45 சதவிகிதமும் ரூ.3,000-க்கு மேல் பெறுபவர்களுக்கு 39 சதவிகிதமும்திருத்தியஅகவிலைப்படியாகஅளிக்கப்படும். இதனால் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்குக் குறைந்த பட்சம் ரூ.33 அதிகப்பட்சம் ரூ.234 பணப்பயன் அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், அதாவது உள்ளாட்சி மன்றம், மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் இறந்துவிட்ட உதவித்தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய - ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களின் குடும்பங்கள் (மாதம் ரூ.150 கருணைத்தொகை பெறுபவர்கள்) உட்பட, எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால் ஏறக்குறைய 2.30 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

இதனால் அரசிற்கு மொத்தக் கூடுதல் செலவு ரூ.20 கோடியும்,1991-92-இல் ரூ.13.33 கோடியும் கூடுதல் செலவு ஏற்படும்.

தேர்களிலிருந்து பெறப்பட்டுக் காட்சியில் காணப்படும் மரச்சிற்பங்கள் மக்களின் பாராட்டுதலைப் பெறுவனவாக அமைந்திருக்கின்றன.

கடைசியில் காணக்கிடப்பது இயற்கையியல் காட்சிக்கூடம். நீர்ப்பரப்பில் அன்னம் நீந்துவது போன்ற காட்சியும், காட்டில் கரடி ஈசல்களைத் தின்னப்புற்றை நோக்கி வருவது போன்ற காட்சியும், காட்சியின் அமைப்பின் சிறப்பைக் காட்டுகின்றன.

இவைதானா? கடலின் நண்டு வகைகளும், சங்கு வகைகளும், எங்கள் பங்கைப் பாங்குடன் பாருங்கள் எனக் காட்சியில் தங்கி இருப்பது காண்பவர்களுக்குப்பெரு விருந்தாகும். பூமியில் கல்-மண் வகைகளில் பல பார்ப்பதற்குள்ளன. பூமியின் மீது வளரும் செடி, மரங்களின் நார்கள், மரங்கள் காட்சியகத்தை அலங்கரிக்கின்றனவா? இல்லை. மக்களுக்குத் தங்களைப் பற்றித் தெரிவிக்கின்றன.

கடலூர், அரசு அருங்காட்சியகம், கடலூர்-சித்தூர் நெடுஞ்சாலையில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் திறந்திருக்கின்றது. அருங்காட்சியகத்திற்கு விடுமுறை நாட்கள் வெள்ளிக்கிழமைகள் இரண்டாம் சனிக்கிழமைகள் மற்றும் மூன்று தேசிய விடுமுறை நாட்கள்.

# தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய ஊழியர்கள் ஊதிய உயர்வு குறித்த ஒப்பந்தம்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய ஊழியர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகள் குறித்து 9.12.1991-ஆம் தேதி மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

திரு. ஆச்சாரியலு, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் திரு. இ.தனராஜ், தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியோர் அப்போது உடன் இருந்தனர். திரு. வெ.மாயன், டான்பெட் அண்ணா தொழிலாளர் ஒன்றியத் தலைவர் திரு. குப்புசாமி, தலைவர். தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மற்றும் டான்பெட் ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பட்டதாரி சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். பேச்சு வார்த்தையின் முடிவில், ஒப்பந்தத்தை ஏற்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி கீழ்க்கண்ட சலுகைகள் அறிவிக்கப்பட்டன.

1. 20 சதவிகிதத்திற்குக் குறையாமல் ஊதிய உயர்வு, இதனால் ஒவ்வொரு பணியாளருக்கும் கிடைக்கக்கூடிய குறைந்த பட்ச மாதாந்திர நிதிப் பயன் ரூ.400/-

2. சென்னை நகர ஆலைத் தொழிலாளர்களுக்கான நுகர்பொருள் விலைப்புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு 8 புள்ளி உயர்வுக்கும் ஒரு அகவிலைப்படி உயர்வு.

3. வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி அரசு ஊழியர்களுக்கு உள்ளதுபோல் வழங்குதல்.

4. அரசு ஊழியர்களுக்கு உள்ளதுபோல் எல்லா நிலையிலும் ஸ்பெஷல் கிரேடு நிர்ணயித்தல்.

5. ஒவ்வொரு பணியாளர்க்கும் மாதந்தோறும் மருத்துவப்படியாக ரூ.100/- வழங்குதல்.

6. பட்டப்படிப்புப் படித்த பணியாளர்களுக்குக் கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு வழங்குதல்.

7. பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் செலவிற்காகக் கல்விச்செலவுப் படி வழங்குதல்- மற்றும் குறிப்பிட்ட பணியாளர்களுக்குச் சிறப்பு ஊதியம்.

8. விருப்பு ஓய்வுத் திட்டம் அமலாக்குதல்.

9. ஒப்பந்தக் காலம் 4 ஆண்டுகள்.

—இந்தச் சம்பள விகித மாற்றத்தினால் பயன் பெறும் பணியாளர்களின் எண்ணக்கை 700.

இதனால் இணையத்திற்குக் கூடுதல் செலவு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் ஆகும்.

பேச்சு வார்த்தை முடிவில் பணியாளர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும் பதிவாளர் அவர்களையும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளனர்.

---




''கூட்டுறவால் கோடி நன்மை'' என்ற தலைப்பில் கவிஞர் முருகு வண்ணன் இயற்றிய கவிதைப் படைப்பு மிகவும் அருமை.

—ப. அருணாசல சண்முகம்,
களம்பூர்
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

''எயிட்ஸ் நோய் பற்றிய ஆய்வுக் கட்டுரையைப் படித்தேன். இதன் மூலம் எயிட்ஸ் நோய் என்பது என்ன? இது எவ்வாறு பரவக் கூடியது? இதனை எளிய முறையில் தடுக்க வேண்டிய முறைகள்- இவையனைத்தும் பயன் அளிக்கும் விதத்தில் அமைந்திருந்தன.

—த.வசந்தராஜா,
வாழப்பட்டாம்பாளையம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

''நானிலம் காத்த நேருவின் நடுநிலைக் கொள்கை'' பற்றிய கட்டுரையின் மூலம் நேருவின் ஆக்கப்பூர்வமான அரிய கருத்துக்களை எடுத்துக்கூறி இருந்தது பாராட்டத்தக்கதாகும்.

—சு.காவேரி
வாழப்பட்டாம்பாளையம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

''மழைக்கால நோய்கள், எயிட்ஸ் நோய்- ஒரு அறிவுரை என்னும் கட்டுரை பயன்மிக்கவை.

—எஸ்.பி. வேலுசாமி,
கே.பி. சத்தரம்
நஞ்செய்தலையூர்,
(பெரியார் மாவட்டம்)

''மருத்துவப் பகுதி மிகவும் பயனுள்ள வகையில் இருக்கிறது - தொடரட்டும்.

—வே. கதிரவன்
திருவாரூர்.

## தமிழக அமைச்சரவையில் இரு அமைச்சர்களின் துறைகளில் மாறுதல்

தமிழக அமைச்சரவையில் சில அமைச்சர்கள் துறைகள் மாற்றப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் பரிந்துரையின்படி, மேதகு ஆளுநர் திரு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் இது தொடர்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதன்படி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு டி. ஜெயக்குமார் அவர்களிடமிருந்த வனம் மற்றும் சின்கோனா ஆகிய துறைகள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு டி.எம். செல்வகணபதி அவர்களிடமிருந்த நகர்ப்புறம் மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறை மாற்றங்களுக்குப் பிறகு இந்த அமைச்சர்களின் புதிய துறைகள் வருமாறு:

திரு டி. ஜெயக்குமார்: கால்நடைப் பராமரிப்பு, பால் வளம், மீன் வளம்.

திரு டி.எம். செல்வகணபதி: வீட்டுவசதி, குடிசைப் பகுதி மாற்று வாரியம், கிராம வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம், வீட்டு வாடகைக் கட்டுப்பாடு, நகர்ப்புறத் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

திரு கே.ஏ. செங்கோட்டையன்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகங்கள், வன வளம், சின்கோனா.

திரு அழகு திருநாவுக்கரசு: நகராட்சி நிர்வாகம், கிராமப்புற வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமப்புறக் கடன் ஒழிப்புத் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், நகர்ப்புற மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கு திட்டங்கள்.



## இந்திய விமானப் படையில் மகளிர்!

நாட்டின் பாதுகாப்புக்கு அரணாகத் திகழும் இந்திய இராணுவத்தில் மகளிரின் பங்கு உயரப் போகிறது. இந்திய விமானப் படையில் மகளிரைச் சேர்த்துக் கொள்வதென்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஏற்கெனவே இந்தியக் கடற்படையில் மகளிர் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இதைத் தொடர்ந்து தற்போது விமானப் படையும் மகளிரைப் பணிக்கு அமர்த்திக் கொள்வதென்று முடிவு செய்துள்ளது. இதன்படி விமானப்படையின் தொழில் நுட்ப வகையில் சேராத 5 பிரிவுகளில் மகளிரை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

விமானப்படையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். மகளிரில் முதல் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு 1992-ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கித் தொடர்ந்து 54 வாரங்கள் அந்தந்தப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படும்.

முதலில் 5 ஆண்டுக் காலம் பணிக்காக மகளிர் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பின்னர் அவர்களின் வேலைத் தகுதியைப் பொறுத்து 11 ஆண்டுக் காலப் பணிக்கு அவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதுமட்டுமின்றி, தரைப்படையிலும் மகளிரை வேலைக்குச் சேர்த்துக் கொள்வது பற்றி பாதுகாப்புத் துறை யோசித்து வருகிறது.

# முக்கிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க முதல்வர் நடவடிக்கை



தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி உயர்வைக் குறைக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்துச் சென்னையில் தலைமைச் செயலகத்தில் 9.12.91 அன்று நடந்த கூட்டத்தில், தமிழ் நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைவாசி நிலைமை களைப்பற்றி முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.ஜி.விஸ்வநாதன், அரசு தலைமைச் செயலர் திரு.டி.வி.வெங்கட்ராமன், உணவுத்துறைச் செயலர், நிதித் துறைச் செயலர், சட்டத்துறைச் செயலர், நுகர்பொருள் வாணிபக் கழக ஆணையர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், முதல்வர் அவர்களின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய முதல்வர் அவர்கள் தமிழக மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் உயர்ந்து வரும் விலைவாசிகள் குறித்துக் கவலை தெரிவித்தார். அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணை, மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட் களின் அதிகபட்ச விலையைச் சட்டபூர்வ அடிப்படையில் நிர்ண யிப்பது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**குழு:**

அத்தியாவசிய உணவுப் பொருட் களின் அதிகபட்ச விலையை நிர்ண யித்து, அதற்கு அதிகமாக வெளிச் சந்தையில் அந்தப் பொருட்கள் விற்கப்படக் கூடாது என்பதை ஆராய, குழு ஒன்றை அமைக்க மாண்புமிகு முதல்வர் உத்தர விட்டார். இந்தக் குழுவில் உணவு மற்றும் நிதித்துறைச் செயலர்கள், நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் ஆணையர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். ஒரு வார காலத்துக்குள் இந்தக் குழு தனது அறிக்கையை அரசிடம் தாக் கல் செய்ய - வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

> ० நான் மூட்டை தூக்குவதில் பாரத்தினால் வேதனைப்பட்டிருப்பேனே யொழிய, மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒருபோதும் வேதனைப்பட்டதில்லை.
>
> — தந்தை பெரியார்

**தீவிர நடவடிக்கை**

விலைவாசி உயர்வைக் குறைக் கும் வகையில் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முதல்வர் வற்புறுத்தினார். கடத்தல் மற்றும் பதுக்கல் தடுப்பு நடவடிக்கை களை உடனடியாகத் தீவிரப்படுத்த வேண்டுமென்று உணவு வழங்கல் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**விலைப்பட்டியல்**

கடைகள் மற்றும் கிடங்குகளின் முன்னால் அத்தியாவசியப் பொருட் களின் இருப்பு மற்றும் அவற்றின் விலைவிவரங்களை எழுதிவைப் பதை உறுதிப்படுத்தத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட வேண்டு மென முதல்வர் உத்தரவிட்டார். இதுகுறித்து, தேவையான குறிப்பு களை வழங்கித் தொடர் நடவடிக்கை களை எடுக்குமாறு உணவு வழங்கல் துறை கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது.



# படமும்

மகாகவி பாரதியாரின் பிறந்த நாளையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா மற்றும் அமைச்சர் பெருமக்கள் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர் (11.12.'91).

# செய்தியும்

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை பாரிமுனையிலுள்ள மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்தனர் (10.12.'91).



# குடும்ப அட்டை வினாத்தாள் குறித்து அரசின் விளக்கம்

குடும்ப அட்டைகளில் உள்ள விவரங்களைப் புதுப்பிப்பதற்காக அரசு விநியோகித்துள்ள வினாத்தாள் குறித்து அட்டைதாரர்கள் எழுப்பியுள்ள சில சந்தேகங்களுக்குக் கீழ்க்கண்ட விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

1. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ள இந்த வினாத்தாளை முழுவதுமாக நிரப்பி நியாயவிலைக் கடைகளில் விரைவாக, எப்படியும் 31.12.1991-க்குள் திருப்பித் தந்துவிட வேண்டும்.

2. சம்பளம் பெறுபவர்கள் சம்பளச் சான்றிதழை அளித்தால் போதுமானது. இந்தச் சம்பளச் சான்றிதழை தற்போது வழங்கப்பட்டுள்ள வினாத்தாளிலேயே அளிக்கலாம். அல்லது வேலை செய்யும் நிறுவனம் அதை வேறு ஒரு தாளிலும் வழங்கலாம். நில/கட்டடச் சொந்தக்காரர்கள், சொந்தத் தொழில்கள் செய்பவர்கள், வணிகர்கள் மற்றும் சுயவேலை செய்பவர்கள் போன்றோர் தாசில்தார் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழைப் பெறத் தேவையில்லை. தமது வருமான விவரங்களைக் குடும்ப அட்டைதாரர் வினாத்தாளில் தானே வழங்கலாம்.

3. ஓய்வூதியம் பெறுபவர்கள் சான்றிதழ் எதுவும் அளிக்கத் தேவையில்லை. அவர்கள் தமது ஓய்வூதியத் தொகையையும் ஓய்வூதியம் வழங்கப்படும் ஆணை எண்ணையும் குறிப்பிட்டால் போதும்.

4. இந்தத் தகவல்கள் குடும்ப அட்டைகளில் 1982-இல் பதியப்பட்ட விவரங்களை இன்றைய நிலைக்குப் புதுப்பிப்பதற்காகவே பெறப்படுகின்றன. இவை குடும்ப அட்டைகள் வழங்கவோ, பெயர்களை நீக்கவோ அல்லது சேர்க்கவோ அல்லது முகவரி மாற்றத்துக்காகவோ பெறப்படவில்லை. தற்போதுள்ள முறைப்படியே இவை தொடர்ந்து நடைபெற்று வரும்.

5. தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் 31.12.1992 வரை உபயோகத்தில் இருக்கும்.

6. சமையல் வாயுத் தட்டுப்பாட்டுக் காலங்களில் தேவைப்படும் அதிக மண்ணெண்ணெயின் தேவைகளை அறியும் பொருட்டே சமையல் வாயு குறித்த தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

# ஊனமுற்ற மகளிருக்கு வேலை வாய்ப்பு



தமிழ்நாட்டில், ஊனமுற்ற மகளிர் 8,244 பேர், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். இந்த ஊனமுற்ற மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கத் தமிழக அரசு புதிய திட்டம் வகுத்துள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாகச் சீருடைகள், தமிழகம் முழுவதுமுள்ள சுமார் 74 மகளிர் தையற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், ஆண்டொன்றுக்கு 64 இலட்சம் ஜோடி சீருடைகள் உற்பத்தி செய்யும் பணியில் ஊனமுற்ற மகளிரை ஈடுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி, சீருடைகள் தைத்துத் தருகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மகளிர் தையற் கூட்டுறவுச் சங்கத்திலும் கண்டிப்பாக ஊனமுற்ற மகளிர் சேர்க்கப்பட வேண்டும் எனவும், அச்சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 10 பேர் ஊனமுற்ற மகளிர் சேர்க்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றது.

31.1.92-க்குள் மகளிர் தையற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ள ஊனமுற்ற மகளிர் எத்தனைப் பேர் என்ற விவரம் அரசுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பஞ்சாலைகளின் போனஸ் பிரச்சினை: மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தை

தமிழ்நாட்டிலுள்ள 524 பஞ்சாலைகளில், போனஸ் பிரச்சினை குறித்துத் தீர்வு காணப் படாமல் எஞ்சியிருந்த 22 ஆலைகளின் நிர்வாகத் தினரையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

அன்றைய பேச்சுவார்த்தையில், 22 பஞ்சாலை களில் 4 ஆலைகளில் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்குவது குறித்து சுமுகமான தீர்வு காணப்பட்டது. மீதமுள்ள 18 ஆலைகளின் நிர்வாகத்தினர் இம்மாதம் 12-ஆம் தேதிக்குள் போனஸ் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது. இந்தப் பிரச்சினை யில் தமிழ்நாடு அரசின் நிலையைத் திரும்பவும் வலியுறுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பஞ்சாலைகளின் போனஸ் குறித்து 15.11.91 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தென் இந்திய ஆலை சங்கத்தின் (SIMA) பிரதிநிதி களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது எடுத்த முடிவின் அடிப்படையில் இந்த 18 ஆலைகளின் நிர்வாகத்தினரும் போனஸ் பிரச்சினை குறித்து முடிவு எடுக்கவேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., முதலமைச் சரின் செயலாளர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., தொழிலாளர் நலத்துறை செயலாளர் திரு. ஆர். வரதராஜுலு, இ.ஆ.ப., தொழிலாளர் நல ஆணையர் திரு. என். ஆதிமூலம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தார்கள்.

இப்பேச்சுவார்த்தையில் ஆலை உரிமையாளர்களும், தொழிற்சங்கத் தலைவர் களும் கலந்து கொண்டனர்.

## கண்புரை அறுவைச் சிகிச்சையில் நவீன முன்னேற்றங்கள்!

கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோர், அந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு மருத்துவமனை யில் சில நாட்கள் தங்கி இருக்கவேண் டிய கட்டாயம் நிலவியது ஒரு காலத்தில். அத்துடன் அவர்கள் தடிமனான மூக்குக் கண்ணாடிகளைத் தங்கள் வாழ்நாள் முழுதும் அணிந்து தீரவேண் டிய நிர்ப்பந்தமும் இருந்தது.

இந்த நிலை இப்போது அப்படியே மாறிவிட்டது. அமெரிக்காவில் இப் போது கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்கள், அன்றைய தினமே வீட்டுக்கு அனுப்பிவைக்கப் பட்டு விடுகின்றனர். அன்றியும், மூக்குக் கண்ணாடிகளுக்குப் பதிலாகக் கண்ணுக்கு உள்ளேயே பொருத்திக் கொள்ளக்கூடிய லென்சுகளும் புழக்கத் திற்கு வந்துவிட்டன.

# முன்னாள் படைவீரர் நலத்துறையின் முனைப்பான பணிகள்

**த**மிழ்நாட்டில் சுமார் 8 இலட்சம் முன்னாள் படைவீரர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் உள்ளனர். இது தவிர ஆண்டுதோறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 5,000 வீரர்கள் படைப் பணியிலிருந்து இளம் வயதிலேயே ஓய்வு பெற்று, கடினமான இராணுவப் பணிக்குப்பின் அமைதியான மறுவாழ்வை எதிர்நோக்கி, தங்களது சொந்த ஊருக்குத் திரும்புகின்றனர்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் நலம், மறுவாழ்வு ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகவும், தலையாய கடமையாகவும் கொண்டு முன்னாள் படைவீரர் நலத்துறை, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலம் பல மறுவாழ்வுப் பணிகளையும், அரசின் நலத் திட்டங்களையும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி ஆகிய இரண்டு நல நிதிகள் அவற்றிற்கென அமைந்த குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு, முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தால் பராமரிக்கப்பட்டு வகின்றன. மேதகு ஆளுநர் தலைமையில் அமைந்துள்ள கொடி நாள் அமைப்புக் குழுவினால் ஒவ்வொரு ஆண்டும் கொடிநாள் வசூல் குறியீடு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டு, மக்கள் மனமுவந்து அளிக்கும் கொடிநாள் நன்கொடைகள் முன்னாள் படைவீரர் நல நிதியில் சேர்க்கப்பட்டு, அவர்களின் நலனிற்காகவும், புணர்வாழ்விற்குமான பல்வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1981-ஆம் ஆண்டு 17 இலட்சங்களாக இருந்த கொடிநாள் வசூல், 1990-ஆம் ஆண்டு 1.45 கோடியை எட்டியிருப்பது தமிழக மக்கள் முன்னாள் படைவீரர்கள்பால் கொண்டுள்ள பெருமதிப்பையும் அன்பையும் காட்டுகின்றது.

முன்னாள் படைவீரர் நலத்துறையின் பணிகள் கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அமல்படுத்தப்படுகின்றன.

1. வேலைவாய்ப்பு
2. சுய வேலைவாய்ப்பு
3. நிதியுதவி மானியம் மற்றும் இதர நலப்பணிகள்.

## வேலைவாய்ப்பு

முன்னாள் படைவீரர் அவரவர்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றதான, அரசின் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்கும், தனியார் நிறுவனப் பணிகளுக்கும், மாநில மற்றும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் இயங்கும் சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவுகளினால் பரிந்துரைக்கப்படுகிறார்கள். முன்னாள் படைவீரர்கள் இத்தகைய சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டால் போதுமானது. 1990- ஆம் ஆண்டு வரை சுமார் 11,000 முன்னாள் படைவீரர்கள் சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவின் மூலம் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். சுமார் 15,000 முன்னாள் படைவீரர்கள் உயர்பதிவேட்டில் உள்ளனர். மாநில அரசின் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் முன்னாள் படைவீரர்களால் நிரப்பப்படுகின்றவா என்பதைக் கண்

**தேர்தல் காலப் பாதுகாப்புப் பணிகளுக்குச் செல்லும் முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி.**





முன்னாள் படைவீரர்களின் வாரிசுகளுக்குத் தையற் பயிற்சி அளித்தல்.

காணிக்க மாநில அளவிலான ஒரு குழு செயல்பட்டு வருகிறது. இக் குழு முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்காக மருத்துவத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களும் சரியான முறையில் நிரப்பப்படுகின்றனவா என்பதையும் கண்காணித்து வருகிறது.

வங்கிகளின் தேர்வாணைக் குழுவினால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு முன்னாள் படை வீரர்களுக்கு உதவித் தொகையுடன் கூடிய சிறப்பு முன்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இதர அரசுப் பணிகளுக்கான தேர்வுகள், பொறியியல் வேலைக்கான சிறப்புப் பயிற்சிகள் ஓட்டுநர் உரிமம் பெறப் பயிற்சிகள் ஆகியன உதவித் தொகையுடன் வழங்கப்படுகின்றன. மேலும், டி.வி. (விசிஆர்) ஆகியவற்றைத் தயாரிக்கவும்; பழுதுபார்க்கவும், சிறப்புக் கம்ப்யூட்டர் பயிற்சிகளும் உதவித் தொகையுடன் வழங்கப்படுகின்றன. இவற்றின் மூலம் அவர்கள் வேலைவாய்ப்பினையும் சுய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொள்ளவும் உதவியாக அமைந்துள்ளது. 1991-ஆம் ஆண்டு சுமார் 250 முன்னாள் படைவீரர்களுக்கு வங்கித் தேர்வுகளுக்கான சிறப்பு முன் பயிற்சியும் சுமார் 50 முன்னாள் படைவீரர்களுக்குக் கம்ப்யூட்டர் சிறப்புப் பயிற்சியும் உதவித் தொகையுடன் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அளிக்கப்பட்டன. முன்னாள் படைவீரரின் ஒரு மகனுக்கோ, அல்லது மகளுக்கோ மத்திய-மாநில அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்பட்டு அதற்கான முன்னுரிமைச் சான்றுகள் முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களால் வழங்கப்படுகின்றன.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் வேலைவாய்ப்பினைப் பெருக்கிட முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம் (Texco) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, சுமார் 500 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள், மாநகராட்சியின் இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்குக் கட்டணம் வசூலிக்கும் பணிகள், எண்ணெய் எரிவாயுக் கமிஷன், தனியார் நிறுவனங்களில் காவலர் பணிகள், ரேடியோ ஆப்ரேட்டர் பணிகள், பல்லவன் போக்குவரத்து டிக்கெட்டுகள், சீசன் டிக்கெட்டுகள் விற்கும் பணிகள் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## சுய வேலைவாய்ப்பு

சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் சிறுதொழில்கள் செய்ய முன்னாள் படைவீரர்கள் பெருமளவில் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடன் இணைந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் செம்பெக்ஸ் 1 என்ற திட்டத்தின் கீழ் 57 வயதிற்குட்பட்ட முன்னாள் படைவீரர்கள், ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் விதவைகள் ஆகியோர் சுயமாகத் தொழில் தொடங்க சுமார் 12 இலட்சம் வரையிலான எளிய தவணைக் கடனுதவி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் 10 சதவிகித தொழில் முனைவோரின் பங்கோடு வழங்கப்படுகின்றது. தொழில்களைத் தேர்ந்தெடுப்பது பயிற்சி, தொழில்நுட்ப ஆலோசனை, திட்ட அறிக்கை தயாரிப்பது ஆகியன ஒரு முழு உதவியாக இத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சுமார் 641 முன்னாள் படைவீரர்கள் சுமார் 2158.37 இலட்சங்கள் வரை கடனுதவி பெற்று தொழில்கள் தொடங்கியுள்ளனர்.

சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்த இவர்களை மேலும் தொழில் முனைவோர் ஊக்குவிப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

செம்பெக்ஸ்- II என்ற திட்டத்தின் கீழ் நிலவள வங்கி மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுடன் இணைந்து தங்கள் நிலத்தைச் சீர்படுத்தி விவசாயத்தைப் பெருக்கிடவும், குடிசைத் தொழில்களை மேற்கொள்ளவும் முன்னாள் படைவீரர்

களுக்கு எளிய தவணைக் கடனுதவி வட்டிச் சலுகையுடன் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 169 முன்னாள் படைவீரர்கள் ரூ.51.38 இலட்சங்கள் வரை கடனுதவி பெற்றுப்பயனடைந்துள்ளனர்.

'பெக்சம்' என்ற திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்களுக்குத் தொழிற்பயிற்சி, பால்பண்ணை, கோழி வளர்ப்பு ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிகள் உதவித் தொகையுடன் அளிக்கப்பட்டு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கடனுதவியுடன், வட்டிச் சலுகை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 783 முன்னாள் படைவீரர்கள் ரூ.44.30 இலட்சங்கள் வரை கடனாகவும், ரூ.8.21 இலட்சங்கள் வரை மானியமாகவும் பெற்றுள்ளனர்.

வங்கிக் கடன் வட்டி மானியத் திட்டத்தின் கீழ் ரூ.75,000 வரை தொழில் தொடங்கவோ அல்லது செய்து வரும் தொழிலை விரிவு படுத்தவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு 7 சத விகிதத்திற்கு மேலான வட்டி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 2,042 முன்னாள் படைவீரர்கள் ரூ.3.75 கோடி வரை கடனாகப் பெற்றுப்பலனடைந்துள்ளனர். வட்டிச் சலுகையாக ரூ.11 இலட்சங்கள் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்கூடங்கள் மற்றும் காலிமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கு 10 விழுக்காடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இடஒதுக்கீட்டின் அடிப்படையிலோ அல்லது பொது ஒதுக்கீட்டின் கீழோ தொழிற்கூடங்கள், மனைகள் பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு அவற்றின் மொத்த விலையில் 25 சத விகிதம் அல்லது ரூ.25,000-க்கு மிகைப்படாத தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

வங்கிகளில் இருந்து கடன் பெற்று தொழில் தொடங்க இயலாத முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகளுக்கு நல நிதியிலிருந்து பெட்டிக்கடை, காய்கறி பழ வியாபாரம் போன்ற சிறிய அளவிலான தொழில்களுக்கு ரூ.5,000 வரை மானியமாக வழங்கப்படுகின்றது. 1987-ஆம் ஆண்டிற்கு முன் சுமார் 397 படைவீரர்கள் ரூ.2.10 இலட்சங்கள் வரை மானியமாகப் பெற்றுப்பயனடைந்திருக்கின்றனர். விலைவாசி உயர்வைக் கவனத்தில் கொண்டு ஒரு ஆண்டிற்குச் சுமார் 6 இலட்சங்கள் வரை மானியமாகக் கொடுக்க முடிவு செய்ததைத் தொடர்ந்து சுமார் 959 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் ரூ.6 இலட்சங்கள் வரை மானியமாகப் பெற்று, சிறிய தொழில் தொடங்கி தங்களுக்கு ஒரு நிரந்தர வருவாயைத் தேடிக் கொண்டுள்ளனர்.

**திண்டுக்கல்லில் கூடுதல் சார்பு நீதி மன்றம்.**

**தமிழக அரசு 1991-92-இல் அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல்லில் கூடுதல் சார்பு நீதி மன்றம் அமைப்பதற்காக ஆணை பிறப்பித்துள்ளது. இந்தக் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஏற்கெனவே இருந்துவரும் திண்டுக்கல் நீதிமன்ற வளாகத்திலேயே இயங்கும்.**

முன்னாள் படைவீரர்கள் விதவைகள், அவர்களைச் சார்ந்தோர்களுக்குத் தையற்பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சிகள் உதவித் தொகையுடன் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு இலவசமாகவோ அல்லது மானியத்துடன் கூடிய சுலபமான தவணைகளிலோ நிரந்தர வருவாய் ஈட்டும் பொருட்டு தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், தையல் பயிற்சி பெற்ற சுமார் 595 முன்னாள் படைவீரர்களின் விதவைகள் மற்றும் மகள்கள் சுமார் 1,90,063 இணைச் சீருடைகள் தைத்து ரூ.4.80 இலட்சங்கள் வரை ஊதியமாகப் பெற்றுள்ளனர். மேலும் முன்னாள் படைவீரர்களின் மகள்களுக்கு வானொலிப் பெட்டி தயாரிப்பது, தோல் ஆடைகள் தைப்பது ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர வருவாய் ஈட்டிடும் வகையில் தொழில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

ஊனமுற்ற படையினர், போரில் வீரமரணம் எய்தியோரின் கைம்பெண்கள், தகுதியுடைய முன்னாள் படைவீரர்கள் மற்றும் கைம்பெண்கள் ஆகியோரின் மறுவாழ்விற்கெனத் தமிழ்நாட்டில் சுமார் 305 ஜெய் ஜவான் பெட்டிக் கடைகள் ரூ.13.85 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இவர்கள் மாதம் சுமார் 400-இல் இருந்து ரூ.1000 வரை வருமானம் ஈட்டி வருகிறார்கள்.

## நிதியுதவி, மானியம் மற்றும் இதர நலப்பணிகள்

வயது முதிர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு உடனடி நிவாரண நிதியுதவி, சிறப்பு நிவாரண நிதியுதவி, மாதாந்தர நிதி உதவி, ஓய்வூதியம் ஒப்பளிப்பு ஆகும் வரையில் இடைக்கால நிவாரண நிதி உதவி, முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற நிலையில் முதல்- இரண்டாம் உலகப் போர்களில் பணியாற்றிய 63 வயதிற்கு மேற்பட்ட முன்னாள் படைவீரர்களுக்கும், 60 வயதிற்கு மேற்பட்ட அவர்தம் விதவையர்க்கும் ஆயுட்கால மாதாந்தர நிதி உதவி போரில் வீரமரணம் எய்திய படைவீரர்களின் விதவையர்க்கு ஆண்டுப் பராமரிப்புப் படி, வீடு கட்ட நிதி உதவி ஆகியன அளிக்கப்படுகின்றன.

முன்னாள் படைவீரர் மற்றும் விதவையின் ஒரு மகளின் திருமணத்திற்கு நிதி உதவி, முன்னாள் படைவீரர்களின் விதவைகளுக்கு மட்டும் வீட்டு வரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு மற்றும் முன்னாள் படைவீரர் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கு நிதி உதவி ஆகியன வழங்கப்படுகின்றன.

அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகளில் 12 படுக்கைகள் கொண்ட தனி வார்டும், காசநோய் மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட தனி வார்டும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

காச நோய், தொழுநோய், புற்றுநோய் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறும் முன்னாள் படைவீரர்களுக்குச் சத்துணவிற்கான நிதி உதவியும், நிரந்தரத் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட மற்றும் முற்றி

லும் கண்பார்வை இழந்த முன்னாள் படைவீரர்களுக்கும், விதவையர் களுக்கும் ஆயுட்கால மாதாந்தர நிதி உதவியும்அளிக்கப்படுகின்றனஇருதய மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் முன்னாள் படைவீரர்களுக்கு ரூ.20,000 வரை மானியமாக வழங்கப்படுகின்றது.

ஊனமுற்ற படைவீரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி மற்றும் செயற்கை உறுப்புகள் வாங்க நிதி உதவி மற்றும் முன்னாள் படைவீரர் களுக்குச் செயற்கைப் பற்கள், மூக்குக் கண்ணாடி, காதுகேட்கும் கருவிகள் வாங்க நிதி உதவிகள் அளிக்கப் படுகின்றன. ஓய்வூதியம் பெறும் ஆதரவற்ற முன்னாள் படைவீரர் களுக்கான இல்லம் ஒன்று வேலூரில் ரூ.6,29,931 செலவில் கட்டப் பட்டுள்ளது. குறைந்த கட்டணமாக மாதம் ரூ.100 இவர்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டு இவர்களுக்கு உணவு, மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய இருப்பிடம் அளிக்கப்படுகிறது.

முன்னாள் படைவீரரின் குழந்தை களுக்கு மருத்துவப் பொறியியல், தொழில்நுட்பம், சட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இக்கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை, புத்தகப் படி, சீருடைப் படி, விடுதிக் கட்டணங்கள் ஆகியன வருமான வரம்பிற்கு உட்பட்ட விதி முறைகளின்படி வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தினால் கட்டப்படும் வீடுகள் அடுக்குக் கட்டடங்கள் ஆகியவற்றில் படை யில் பணிபுரியும் வீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கு 7½ சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. மேலும், படையில் பணிபுரி யும் வீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்களுக்கு நீதிமன்றம் மூலம் தீர்வு செய்ய வேண்டிய வழக்குகளில் இலவசச் சட்ட உதவி, ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கும் புதுப்பித்தலுக்கும் கட்டண விதிவிலக்கு ஆகியன அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 7 மாவட்டத் தலைமையகங்களில் 7 ஜவான்ஸ் பவன்களும். 2 ஜவான்ஸ் மார்க் கெட்டுகளும் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் மாவட்டத் தலைமையகங் களுக்கு வரும் முன்னாள் படை வீரர்கள் தங்குவதற்கு இடவசதி ஏற் படுத்தித் தருவதோடல்லாமல் இதில் கட்டப்பட்டுள்ள கடைகளிலிருந்து கிடைக்கும் வாடகையானது முன் னாள் படைவீரர் நலநிதியில் சேர்க் கப்பட்டு, முன்னாள் படைவீரர் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. மேலும், ஐந்து மாவட்டத் தலைமையகங்களில் ஜவான்ஸ் பவன் கட்டும் பணி துவக்கப்பட்டிருக்கிறது. 14 மாவட் டங்களில் முன்னாள் படைவீரர் நல மையங்கள் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் களின் நலனுக்காக இயங்கி வரு கின்றன. குறைந்த கட்டணத்தில் அவர்கள் தங்குவதற்கு வசதியும் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் நூலகம் முதலிய பொழுதுபோக்குச் சாதனங்களும் இந்த மையங்களில் இடம்பெற்றுள் ளன. இந்த மையங்களிலேயே மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள், இயங்குவதால் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பற்றிய தகவல் மையங்களாகவும் இவை விளங்குகின்றன. கொடைக்கான லில் முன்னாள் படைவீரர்கள் தங்கு வதற்கான விடுதி ஒன்று ரூ.5.70 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. மேலும் கன்னியாகுமரி, ராமேஸ் வரத்திலும் இத்தகைய விடுதிகள் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள் ளது.

நமது நாட்டிலேயே முதன்முறை யாகத் தேர்தல் பாதுகாப்புப் பணி களுக்கு முன்னாள் படைவீரர்களை ஈடுபடுத்தியது தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

1991-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-இல் நடைபெற்ற பாராளு மன்ற, சட்டமன்றத் தேர்தல் பாது காப்புப் பணியில் சுமார் 25,000 முன்னாள் படைவீரர்கள் ஈடுபட்டு சுமார் ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் வரை ஊதியமாகப் பெற்றனர்.

தேசிய எழுத்தறிவிப்பு இயக்கத் தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் ஈடுபட்டிருப்பது நமக்கு மேலும் பெருமை சேர்ப்ப தாகும். நாட்டு முன்னேற்றத்தின் ஒரு முக்கிய திட்டத்தில் பங்கேற்ப தோடு மட்டுமல்லாமல், அவர் களுக்கு ஒரு கணிசமான வருவாயை யும் இது ஈட்டித் தருகிறது.

இவ்வாறு முன்னாள் படை வீரர்களின் திறமைகளை நாட்டு முன்னேற்றத் திட்டங்களிலும், சமு தாயப் பணிகளிலும் பயன்படுத்தி, அவர்களின் மறுவாழ்வுத் திட்டங் களை அமல்படுத்திட முன்னாள் படைவீரர் நலத்துறையின் பணிகள் தொடருகின்றன.

## அட்டைப்பட விளக்கம்:

### முதல் அட்டை:

காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றிய நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசிதழில் உடனடியாக வெளியிடக்கோரி, அனைத்துக் கட்சியினருடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்று மாண்புமிகு பிரதமரிடம் மனு அளித்தார் (3.12.'91).

### இரண்டாம் அட்டை:

கொடி நாளையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னாள் படைவீரர் நல இயக்குநர் திரு. கிறிஸ்து தாஸ் காந்தி இ.ஆ.ப. அவர்களிடம் கொடிநாள் நிதியளித் தார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெய்ஸ்ரீ பாலசந்தர் இ.ஆ.ப. அவர்கள் உடனிருந்தார் (5.12.91).

### நான்காம் அட்டை:

'எழில்மிகு சென்னை-2000'- என்ற திட்டத்தின்கீழ் சென்னையில் புதிய மூர்மார்க்கெட் வளாகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் (28.11.'91).

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

Licence No. TN/MS(C)/PP-23

